# PTA

## பயங்கரவாதத் தடைச் சட்டம்
## இலங்கையினை 42 வருடங்களாக
## அச்சுறுத்தி வரும் சட்டம்




உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களின் மீது ஏற்பட்டுள்ள சமூக – பொருளாதார மற்றும் உளவியல் தாக்கங்கள்

# பயங்கரவாதத் தடைச் சட்டம்: இலங்கையினை 42 வருடங்களாக அச்சுறுத்தி வரும் சட்டம்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களின் மீது ஏற்பட்டுள்ள சமூக - பொருளாதார மற்றும் உளவியல் தாக்கங்கள்

**மரிசா த சில்வா**

LAW & SOCIETY TRUST

© 2020 சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

அட்டைப் பக்க வடிவமைப்பு - சஞ்சயா எக்னெலிகோடா

LAW & SOCIETY TRUST

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பின்
கூட்டணி
இல. 03,

கின்சி டெரஸ்,
கொழும்பு 08,
இலங்கை
தொலைபேசி + 94 (0) 112684845
தொலைநகல் + 94 (0) 112686843
admin@lstlanka.org
www.lstlanka.org

*"நான் சிறையில் இருந்தபோது அங்கே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் சிலருடன் பேசினேன். அவர்களில் சிலர் அவர்களின் கோப்புக்கள் கூட எடுக்கப்படாது 10 வருடங்களாகச் சிறையில் இருப்பது தெரியவந்தது. எனக்கும் இதே கதிதான் ஏற்படுமோ என நான் குலை நடுங்கிப்போனேன்..."*

- என எல் டி ஜஸ்மின் கூறினார். இவர் பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் ஹொரவப்பொத்தானயில் கடந்த வருடம் கைது செய்யப்பட்ட ஐவரில் ஒருவராவார்.

## அறிமுகம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் சமூக - பொருளாதாரத் தாக்கங்களைக் கோடிட்டுக்காட்டுவதற்காகவே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இனத்துவச் சிறுபான்மையினரையும் சமயச் சிறுபான்மையினரையுமே (தமிழ் மற்றும் முஸ்லிம்கள்) பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக அதிகமாக இலக்குவைக்கின்றது. இவர்களின் கைது இவர்களின் குடும்பத்தினரைப் பாதிப்புறுநிலைக்குத் தள்ளியிருக்கின்றது. இக்கைதுகளினால் உருவாக்கப்பட்டுள்ள சமூக - பொருளாதாரத் தாக்கங்களைப் பெண்களே அனுபவித்துவருகின்றனர்.

வயதானவர்களைப் பராமரிக்கும் பொறுப்பும் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் உயிர்வாழ்வதற்காக வருமானம் ஈட்டும் பொறுப்பும் பெண்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளன. சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்கும் கைதுசெய்யப்பட்டுள்ள ஆண்களைச் சந்திப்பதற்கும் இவர்களே செல்லவேண்டியிருக்கின்றது. குடும்பத்தில் பிரதானமாக வருமானம் ஈட்டிவந்தவர்களைத் தன்னிச்சையாகக் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளமையின் மேலதிக விளைவாக குடும்பங்களில் வறுமை மட்டம் அதிகரித்துள்ளதுடன் அவற்றின் கடன்படுநிலையும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அரசின் மீதும் மேலதிகச் சுமை ஏற்படுகின்றது. மேலும், அரசு கூறும் கதைகளைச் சமுதாயமும் நம்பி இவ்வாறான குடும்பங்களைப் பயங்கரவாதக் குடும்பங்கள் என முத்திரை குத்திவருகின்றது. இதனால் இக்குடும்பங்கள் சமூக விலக்கிவைப்பிற்கும் உளவியல் மன அதிர்ச்சிவடுவிற்கும் முகங்கொடுத்துவருகின்றன.

## குற்றம் இழைத்தவருடன் சேர்ந்திருந்ததனால் ஏற்படும் குற்றப்பொறுப்பு

2019 ஏப்ரில் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்ட உடனேயே நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் 2007 ஆம் ஆண்டின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச பொருத்தணையின் (ICCPR) கீழும் கைதுசெய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள சட்டத்தரணிகளின் கருத்துப்படி[1] 18 வயதிற்கும் 49 வயதிற்கும் இடைப்பட்ட குறைந்தது 500 முஸ்லிம்கள் தாக்குதல்களைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் சஹ்ரானின் பிறந்த இடமான மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த 98 பேர் அடங்குகின்றனர். இற்றைவரையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள காத்தான்குடியைச் சேர்ந்த 98 பேரில் 92 பேர் இன்னும் மறியல் சிறையிலேயே இருக்கின்றனர். 6 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் 65 முஸ்லிம் இளைஞர்களும் ஆண்களும் ஒரு குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தன்னிச்சையான மற்றும் வியாபகமான பயன்பாடானது மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற இனமோதலின் போது தமிழ்ச் சமுதாயத்திற்கு எதிராக இச்சட்டம் எவ்வாறு மிகையாகப் பயன்படுத்தப்பட்டுத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதோ அதே பாங்கினையே பின்பற்றிவருகின்றது. இது சமுதாயங்களை மேலும் துருவமயமாக்கி பிளவுகளை ஆழப்படுத்தவே பங்களிப்புச் செய்கின்றது.

வன்முறைமிக்க பயங்கரவாதச் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் கீழ் கட்டாயம் பொறுப்புக்கூற வைக்கப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படும் அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முற்றுமுழுவதும் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் மாத்திரம் எண்ணற்ற குடும்ப உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருப்பது என்பது மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகும். இவ்வாறு சகட்டுமேனிக்கு மேற்கொள்ளப்பட்ட கைதுகள் ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் நிரபராதி என்று கருதப்படுவதை மறுப்பதுடன் குற்றம் இழைத்தவருடன் ஒன்றாக இருந்ததனால் ஏற்படும் குற்றப்பொறுப்பு எனும் சூழலை உருவாக்கி சமூகத்தினை மேலும் துருவமயமாக்கி இஸ்லாம் பற்றிய அச்சத்தினைப் பரப்புகின்றது. அத்துடன் அமைதியான முஸ்லிம் சமுதாயத்தின் மத்தியில் ஆழமான பகையுணர்வினை விதைக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான கைதுகள் பொதுவாகச் சிறுபான்மைச்

[1] கொழும்பு மற்றும் கிழக்கில் இருந்து.

சமுதாயத்தினை இலக்குவைக்கும் அல்லது கருத்து வேறுபாடு கொண்டவர்களை இலக்குவைக்கும் திட்டமிடப்பட்ட நடவடிக்கையாகவே காணப்படுகின்றன அல்லது சாட்சியங்களைச் சேகரிப்பதற்கான வழியாகக் காணப்படுகின்றது. இது அடிப்படை மனித உரிமைகளின் அப்பட்டமான மீறலாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டியதன் அவசரத் தேவையினை இச்சம்பவங்கள் எடுத்து விளக்குகின்றன. பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர்களும் உள்நாட்டு மற்றும் சர்வதேசச் செயற்படுனர்களும் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் குழுக்களும் இச்சட்டம் நீக்கப்படவேண்டும் என நீண்ட காலமாகக் கோரிவருகின்றனர். மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வியாபகமான கைதுகள் மற்றும் தடுத்துவைக்கப்பட்டிருப்போரை நடத்தும் விதம் ஆகியவை இனத்துவ மற்றும் சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு எதிராக ஆழமாக வேரூன்றியுள்ள பக்கச்சார்பினையும் சட்ட அமலாக்கலின் செயலிழப்பினையும் சிறைச்சாலை முறைமைகளின் செயலிழப்பினையும் மறுசீரமைப்பிற்கான தேவயையினையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

## வரலாற்றுச் சூழமைவு

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்க் கிளர்ச்சியினை அடக்குவதற்காக அரசு பயன்படுத்திய குரூர அடக்குமுறையினையும் மனிதாபிமானமற்ற பயங்கரவாதத்திற்கெதிரான உத்திகளையும் சட்டபூர்வமானதாக ஆக்குவதற்காக 1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுமையான சட்டமே பயங்கரவாதத் தடைச் சட்டமாகும். அன்றிலிருந்து இத்தடைச் சட்டம் தமிழ் இனத்திற்கு எதிராக விகிதசமனற்ற முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அவர்களைத் தன்னிச்சையாகக் கைது செய்வதற்கும் குற்றச்சாட்டின்றி நீண்டகாலம் தடுத்துவைப்பதற்கும் மனிதாபிமானமற்ற நிலையில் தடுத்துவைப்பதற்கும் சித்திரவதை செய்வதற்கும் பலவந்தப்படுத்தி குற்றஒப்புதல் பெறுவதற்கும் விடுவிக்கப்பட்ட பின்னர் தொந்தரவு செய்வதற்கும் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் மீளக் கைதுசெய்வதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது நாடு முழுவதிலுமுள்ள சிறைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது

செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறைந்தது 146 பேர் உள்ளனர்[2] (6 பெண்கள் மற்றும் இதய நோயுடைய 1½ வயதுக் குழந்தை உள்ளடங்கலாக).[3]

2015 இன் போதுள்ளவாறாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உண்மையான எண்ணிக்கை தெரியாது. ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 11 உத்தியோகபூர்வ மறியற் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 182 பேரின் பட்டியல் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இப்பட்டியல் பூசா மற்றும் கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைத் திணைக்களம் ஆகியவற்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை உள்ளடக்கவில்லை என்பதால் அக்காலகட்டத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உண்மையான எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கும்.[4]

அக்காலகட்டத்தில் வோச்டோக் கலெக்டிவினால் சுட்டிக்காட்டப்பட்ட சில வழக்குகளில் உள்ளடங்கும் வகைகள்[5]:

- தமது வழக்குகள் பூர்த்திசெய்யப்படாமல் மறியலில் 18 -19 வருடங்களாக இருக்கும் நபர்கள்;
- குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட முன்னர் 15 வருடங்களாக மறியலில் இருக்கும் நபர்கள்;
- நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மறியலில் வைக்கப்பட முன்னர் 15 மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்கள்;
- தமது வழக்குக்கு ஒரு முடிவினைக் காணாமல் வழக்கு விசாரணைக்காக 400 - 500 தடவைகள் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட நபர்கள்,
- ஒரு நபரிற்கு எதிராக 4 மாவட்டங்களில் 6 நீதிமன்றங்களில் 15 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலை;
- 5 -6 வருடங்கள் தடுத்துவைக்கப்பட்டு குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டு அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டவர்கள், ஆனால் விடுவிக்கப்பட்ட பின்னர் தொந்தரவுக்குட்படுத்தப்படுகின்றனர். இதில் மீள்கைதும் உள்ளடங்குகின்றது.

---

[2] மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான மையத்தினால் கையாளப்படும் வழக்குகளிற்கு அமைவாக (CHRD).

[3] அநுராதபுரம் 21, மட்டக்களப்பு 04, யாழ்ப்பாணம் 01, புதிய மகசின் சிறைச்சாலை 100, வெலிக்கட 05, கொழும்பு மறியல் சிறைச்சாலை (CRP) 08, மஹர 03, வெலிசர 01, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு(CCD) 03.

[4] வோச்டோக் கலெக்டிவ், *PTA detainees – Ignored under "Yahapalanaya?"* - https://groundviews.org/2015/09/05/pta-detainees-ignored-under-yahapalanaya/

[5] Ibid.

## இஸ்லாம் பற்றிய அச்சமும் ஊடகத்தின் உடந்தையும்

2009 இல் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அதிகரித்துவந்த இஸ்லாம் பற்றிய அச்சத்தின் மற்றுமொரு அலையினை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உருவாக்கியுள்ளன. பொறுப்பற்ற ஊடக நிறுவனங்களினால் தூண்டிவிடப்படும் முஸ்லிம்கள் பற்றிய இந்தப் பொதுவான பகையுணர்வு சூழ்நிலையினை மேலும் மோசமாக்கி முஸ்லிம் சமுதாயம் மிகவும் பாதிப்புறு நிலையினை அடைவதற்குக் காரணமாகியுள்ளது.[6] சிங்களப் பெண்களுக்குப் பெரும் எண்ணிக்கையில் கர்ப்பத்தடைச் சத்திரசிகிச்சை செய்தார் எனப் பொய்க்குற்றம் சுமத்தப்பட்ட வைத்தியர் சாபியின் சம்பவம்,[7] மற்றும் ஹொரவப்பொத்தான ஐந்து பேரின் சம்பவம் (*இச்சம்பவங்களின் விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன*) ஆகியவை பொய்களைப் பரப்பி, குத்துக்கதைகளையும் வெறுப்புரைகளையும் விதைத்து 6 ஆண்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் வாழ்வினை ஊடகங்கள் அழித்தமைக்கான தெளிவான உதாரணங்களாகும். இற்றைவரை, தமது பொறுப்பற்ற செயலுக்காக எந்த ஊடகமும் வகைப்பொறுப்புக் கூற வைக்கப்படவில்லை.

*"நாங்கள் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விரும்புகின்றோம். அவர்கள்தான் அவர்களின் பொய்யினால் எங்கள் வாழ்வை அழித்தவர்கள். அவர்களின் பொறுப்பற்ற செய்திகளுக்காக அவர்கள் வகைப்பொறுப்புக் கூறவேண்டும். லங்காதீபவின் முதல் பக்கத்தில் எவ்வாறு என் கணவரைப் பற்றிப் பொய்களைப் பிரசுரித்தார்களோ அவ்வாறே முதல் பக்கத்தில் அவற்றினை வாபஸ்பெற்று மன்னிப்பினை வெளியிடவேண்டும் என்பதே எமது தேவையாகும்."* எனக் கடந்த வருடம் ஹொரவப்பொத்தானயில் பொய்க் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஐந்து ஆண்களில் ஒருவரின் மனைவியான ஜே. ஹைருல்ஹுதா குறிப்பிட்டார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள பலரின் குடும்பத்தினர் தங்களின் சமுதாயத்தினர் தங்களை ஒதுக்கிவைத்துள்ளதாகவும் தங்கள் பிள்ளைகள் கூடப் பாடசாலையில் சக மாணவர்களினாலும் ஆசிரியர்களினாலும் தொந்தரவுக்கு ஆளாவதாகவும் குறிப்பிட்டனர். *"நாங்கள் எங்கே சென்றாலும் மக்கள் எங்களைப் பார்த்து 'ஐஎஸ்எஸ் கூட்டம் வருகின்றது எனக் கூறுகின்றனர். எங்கள் பிள்ளைகளிடம் அவர்களின் தந்தை ஏன் சிறையில் இருக்கின்றார் எனக் கேட்கின்றனர். அவர் ஐஎஸ் பயங்கரவாதியா எனக் கேட்கின்றனர். தாக்குதல் நடக்கும் வரை சஹ்ரான் என்ற பெயரைக் கூட நாங்கள் கேள்விப்பட்டதில்லை. எங்களுக்கு ஏன் இவையெல்லாம் நடக்கின்றன?"* தாக்குதலைத் தொடர்ந்து

---

[6] இனப் பதற்றத்தினை உருவாக்கி முஸ்லிம்களுக்கெதிரான பாகுபாட்டுணர்வுகளை உருவாக்கியதில் மிகவும் உடந்தையாக இருந்த ஊடகங்களில் தெரன, ஹிரு, திவயின, லங்காதீப போன்றவை அடங்குகின்றன

[7] சண்டே ஒப்சேவர், *"ஊடகம் எங்களைக் கொன்றுவிட்டது"*: *குருணாகல் வைத்தியரின் மனைவி மனந்திறக்கின்றார்* - http://www.sundayobserver.lk/2019/06/16/news-features/%E2%80%9C-media-has-killed-us%E2%80%9D-kurunegala-doctor%E2%80%99s-wife-speaks-out

கைதுசெய்யப்பட்டவர்களின் மனைவிமார்களும் தாய்மார்களும் மனம் வருந்திக் கூறியவை.

## உதவியின்மையும் கடன்படுநிலையும்

குடும்பத்திற்காக உழைத்து வருமானம் ஈட்டிய ஒரே உறவினை இழந்த பல குடும்பங்கள் வருமானத்திற்கான மாற்று மூலத்தினைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளன. உறவினர்கள் இந்தக் குடும்பங்களுக்கு உதவுவதற்குத் தங்களால் இயன்றதைச் செய்துள்ளனர். இருப்பினும் இக்குடும்பங்கள் சட்டத்தரணிகளின் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் போக்குவரத்திற்கும் சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்வதற்கும் உணவிற்காகவும் பிள்ளைகளின் பாடசாலைச் செலவுகளுக்காகவும் கடன் பெறவேண்டியும் தங்கள் உடைமைகளை அடகு வைக்கவேண்டியும் இருக்கின்றது. மேலும் கைது செய்யப்பட்டவர்களின் மீதுள்ள பழியினாலும் தாக்குதல்களைத் தொடர்ந்து இக்குடும்பங்கள் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளதாலும் மக்கள் இவர்களுக்குக் கடன் கொடுக்கவும் வேறு வழிகளில் உதவவும் தயங்குகின்றனர்.

பெண்கள் சுயமாக வெளியில் சென்று தேவைகளை நிறைவேற்றிப் பழக்கம் இல்லாத குடும்பங்களிற்கு இந்த நிலைமை சிரமமானதாக ஆகியுள்ளது. இந்தப் பெண்களும் அவர்களின் குடும்பங்களும் தங்களைப் பராமரிக்க வேறு வழியற்றவர்களாக உள்ளனர். இதற்கான உதாரணமாக ஒரு சம்பவத்தினைக் குறிப்பிட முடியும். காத்தான்குடியினைச் சேர்ந்த பெண் ஒருவர் தையல் வேலை செய்துவந்ததுடன் அண்மையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்காக ஆடைகளின் துண்டுகளைத் தைத்துக் கொடுக்கும் வேலையினைச் செய்துவந்தார். அவரது கணவர் அவருடன் இருந்தபோது அவர் தன் மனைவிக்குத் தேவையான விநியோகங்களைச் சேகரித்து மனைவியிடம் கொடுத்து மனைவி தயாரித்த முடிவு உற்பத்திகளை தொழிற்சாலைக்கு வழங்கிவந்தார். இப்போது அப்பெண்ணால் இதனைச் செய்ய முடியாதுள்ளது. ஏனெனில் அவருக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு யாரும் இல்லை. அவரின் முடிவுப் பொருட்களை எடுத்துச் செல்லவும் யாருமில்லை. உறவு முறையில்லாத ஆண்கள் இவர்களின் வீடுகளுக்கு வருவது கலாசார ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. தனது கடன்களை மீளச் செலுத்த முடியாமலும் தனது தேவைகளை நிறைவேற்ற முடியாமலும் இப்பெண் கஸ்டப்படுகின்றார். இக்குடும்பங்கள் எவற்றிற்கும் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது ஏனைய குழுக்களிடமிருந்தோ உதவி வழங்கப்படவில்லை. குடும்பத்திற்காக உழைத்த ஒரே ஆண் இல்லாத நிலையில் இக்குடும்பங்கள் மிகுந்த பண நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றன.

கடந்த வருடம் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட 8 முஸ்லிம் ஆண்கள், ஒரு சிறுவன் மற்றும் ஒரு பெண் ஆகியோரின் குடும்ப உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல் கீழே வழங்கப்பட்டுள்ளது. மேலும் பொய்க் குற்றச்சாட்டின் கீழ் ஹொரவப்பொத்தானயில் கைதுசெய்யப்பட்டு கடந்த நவம்பரில் பிணையில் விடுதலை செய்யப்பட்ட ஐந்து ஆண்களுடனும் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர்களில் இருவருடனான நேர்காணலும் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளது.

**குடும்பம் - *பாத்திமா (தாய்), 53, கிழக்கு மாகாணம், இலங்கை**
**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் - *இன்பாஸ் (மகன்), 21**
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் - கேகாலை சிறைச்சாலை**
**குற்றச்சாட்டு - என்டிஜே ஏற்பாடு செய்த நுவரெலிய பிரச்சாரத்திற்குச் சென்றமை**
**தொழில் - விற்பனைப் பிரதிநிதி, ஹாட்வெயார் கடை**
**திருமண அந்தஸ்து - திருமணமாகாதவர்**
**தங்கியிருப்போர் - பெற்றோரில் ஒருவரான தாய் மட்டும், தையல் தொழில் புரிபவர்**

*பாத்திமாவின் கணவர் மூன்றாவது பிள்ளை பிறந்த பின்னர் குடும்பத்தினைக் கைவிட்டுச் சென்றுவிட்டார். பாத்திமா இன்பாசைப் படிப்பிப்பதற்காக அவரின் வீட்டினை விற்றுவிட்டார். வீட்டை விற்ற நாள் முதல் இவர்கள் வாடகை வீட்டில் வாழ்ந்து வருகின்றனர். இவரின் இரண்டு மூத்த மகன்களும் திருமணம் முடித்துவிட்ட காரணத்தினால் இளைய மகனான இன்பாஸ் தாயாரையும் 75 வயதான பாட்டியையும் கவனித்து வந்தார். மாதம் 30000.00 ரூபா உழைத்த இன்பாஸ் தாயாரிற்கு வீட்டுத் தேவைகளுக்காக 25000.00 ரூபா கொடுத்து வந்தார்.

*நுவரெலியாவிற்குப் பிரசங்கம் கேட்பதற்காகத் தங்களுடன் இலவசமாகக் கூட்டிச் செல்கின்றோம் என்று அழைத்த நண்பர்களுடன் சேர்ந்து இன்பாஸ் சென்றிருக்கின்றார். இதைத் தவிர அவருக்கு வேறு எதுவும் கூறப்படவில்லை. எவ்வாறாயினும், தான் தனது நண்பர்களுடன் பார்ட்டி ஒன்றிற்குச் செல்வதாக இன்பாஸ் அவரின் தாயரிடம் கூறி வெள்ளிக்கிழமை மாலை சென்றிருக்கின்றார். சனிக்கிழமை இரவு திரும்பிய இன்பாஸ் தாயாரிடம் பிரசங்கம் பற்றிக் கூறி, தன்னை என்டிஜே தவறாக வழிநடத்தியதாகவும் கூறியிருக்கின்றார்..[8] “இவர் ஒரு பயங்கரவாதியல்ல என்பதற்கு இதுவே

[8] தேசிய தவ்ஹீத் ஜமாஅத் (NTJ)

போதிய சான்றாக இருக்கின்றது," எனத் தாயார் கூறினார். "அவர் பள்ளிவாசலுக்கு ஒழுங்காகச் செல்வார். அது என்டிஜே பள்ளிவாயல் அல்ல".

ரமழான் மாதத்தின் இரண்டாம் நாள் (மே 9, 2019), நானும் எனது மகனும் வீட்டின் பின்புறத்தில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தோம். "தான் தூங்கி விழித்ததும் நோன்பு பிடிப்பதற்காக சமோசா வாங்கி வருவதாக என்னிடம் கூறினார். அன்றைய தினம் பின்னேரம் இரண்டு வாகனங்களில் பொலிசாரும் சிஐடியினரும் எங்கள் வீட்டிற்கு வந்து இன்பாஸ் எங்கே என்று கேட்டனர். விசாரணைக்காக அவரை அழைத்துச் செல்லவேண்டும் எனப் பொலிசார் கூறினர். எனது மகன் எத்தவறும் செய்யவில்லை என் நான் கூறினேன். அவர்கள் மகனின் தொலைபேசியினை எடுத்து அதனைச் சோதனையிட்டுப் பின்னர் அதனைத் தந்தனர். ஆனால் மகனைத் தரவில்லை," என பாத்திமா கூறினார். அவர் முதலில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுப் பின்னர் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். "அவரை எமது வீட்டில் இருந்து கூட்டிச் சென்றனர். ஆனால் குற்றப் பத்திரிகையில் அவர் ஒளிந்திருந்ததாக எழுதினர். அவர்கள் குற்றப் பத்திரிகையினை வாசிக்கையில் அவர்கள் ஏன் பொய் கூறுகின்றனர் என நான் கேட்டேன். இருப்பினும் அவர்கள் அந்த வாக்கியத்தினை மாற்றவில்லை," எனக் குறிப்பிட்டார். இன்பாசை முதற் தடவையாக நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதும் நான் இந்த விடயத்தினை எழுப்பினேன். நீதிபதியும் இன்பாஸ் வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டால் அவர் ஒளித்திருந்தார் என ஏன் எழுதப்பட்டது எனக் கேட்டார்.

இப்பேது இன்பாஸ் கேகாலைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இது பெரும்பான்மையாகச் சிங்கள மக்கள் வாழும் பிரதேசமாகும். "எங்களுக்குப் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தி அங்கே செல்ல முடியாது. எனவே தங்களின் பிள்ளைகள் கேகாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் 15 குடும்பங்கள் சிங்களம் பேசக்கூடிய சாரதியுடன் வேன் ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி ஒன்றாகப் பயணிக்கின்றோம். அவரின் உணவுச் செலவும் எனது பயணச் செலவுமாகச் சேர்த்து எனக்கு ஒரு தடவை பயணம் செய்ய 5000 ரூபா செலவாகின்றது. நாங்கள் முயற்சித்து இரண்டு வாரங்களுக்கொரு தடவையாவது அவர்களைப் பார்க்கப் போகின்றோம். போவதற்கும் வருவதற்கும் ஒரு நாள் போய்விடுகின்றது. மகனுடன் பேச எனக்கு 20 நிமிடங்கள் தான் கிடைக்கின்றது.

"ஆரம்பத்தில் தங்களைப் பனங்கிழங்கு அடுக்கியது போல நெருக்கமாக வைத்திருந்ததாகவும் தாங்கள் பக்கவாட்டிலேயே படுக்கவேண்டியிருந்ததாகவும் மகன் கூறினார். தன்னால் தூங்கவோ அல்லது ஒழுங்காகத் தொழவோ முடியவில்லை எனவும் கூறினார். அழுக்கான இடத்தில் தங்களை வைத்திருந்ததாகவும் கூறினார். இப்போது நிலைமை முன்னேற்றமடைந்துள்ளது என மகன் கூறினார். மகன் என்னைச்

சந்திக்கும்போதெல்லாம் என்னிடம் 'யாரையும் கோபத்தினால் அடிக்கக் கூடாது, ஒரு போதும் வன்முறையில் இறங்கக்கூடாது என்று கூறித்தானே என்னை வளர்த்தீர்கள். இப்போது எனக்கு என்ன நடந்துள்ளது என்று பாருங்கள்' எனக் கூறுகின்றார். அவர் ஏதாவது தவறு செய்திருந்தால், எனக்கு அதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் செய்யாத ஒன்றிற்காக அவர் ஏன் விலை செலுத்தவேண்டும். இறைவன் என் மகனுக்கு உதவுவான் என நான் நம்புகின்றேன். ஏனெனில் மகன் அப்பாவி என்பது இறைவனுக்குத் தெரியும்"

அவருக்கு என்ன தேவை என நாம் கேட்டோம். தனக்குத் தையல் இயந்திரம் ஒன்று தேவை என்றும் அது இருந்தால் பிரதேசத்திலுள்ள பல ஆடைத் தொழிற்சாலைகளின் துண்டுகளைத் தன்னால் தைக்க முடியும் என்றும் அவர் கூறினார். இன்பாஸ் விடுதலை செய்யப்படும் வரை தன்னால் இவ்வாறு வீட்டில் இருந்து வருமானம் ஈட்ட முடியும் என அவர் கூறினார். இயந்திரத்திற்கு 40000.00 ரூபா செலவாகும். அவரால் அதனை வாங்க முடியாது.

**குடும்பம் - *ரெனோசா (மனைவி), 39, கிழக்கு மாகாணம், இலங்கை**
**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் - *ரியாஸ் (கணவர்), 43**
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் - மொனராகல சிறைச்சாலை**
**குற்றச்சாட்டு - என்டிஜே ஏற்பாடு செய்த பிரசங்கத்திற்காக நுவரெலியாவுக்குச் சென்றமை**
**தொழில் - தொழில்நுட்பவியலாளர் இலங்கை போக்குவரத்துச் சபை (CTB)**
**திருமண அந்தஸ்து - திருமணமானவர் - 3 மகள்மார் (07, 12 & 14).**
**தங்கியிருப்போர் - மனைவியும் 3 பிள்ளைகளும்**
**பயணக் கொடுப்பனவு - ஐசிஆர்சியிடம் இருந்து 2600.000 ரூபா பயணக் கொடுப்பனவு 45 நாட்களுக்கு ஒரு தடவை (ஒரு தடவை 2020 ஜனவரி 11 இல் கிடைத்தது)**

அயலவரான ரஊப் (தேசிய தவ்ஹீத் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்) ரியாசையும் அவரது மற்றொரு நண்பரான சுபைரையும் நுவரெலியாவில் நடைபெறவுள்ள 3 நாள் பிரசங்கத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டார். ஆனால் பிரசங்கத்தில் கூறிய விடயம் பிடிக்காமல் சுபைரும் ரியாசும் ஒரு நாளிலேயே ஊர் திரும்பி விட்டனர். ரியாஸ் சாதாரண பள்ளிவாயலிலேயே தொழுது வந்தார். என்டிஜேயின் கட்டுப்பாட்டில் இருந்த பள்ளிவாயலில் அல்ல. இலங்கை போக்குவரத்துச் சபையில் ரியாஸ் தொழில்நுட்பவியலாளரராக வேலை பார்த்தார். ரியாசின் கைதின் பின்னர் ஒரு தடவையில் வழங்கப்படும் கொடுப்பனவாக 37000.00 ரூபா பணம் ரியாசின் மனைவிக்கு வழங்கப்பட்டது (EPF + ETF). அதன் பின்னர் அவர்கள் தங்களின் பிழைப்பைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

*ரமழான் மாதத்தின் 3 ஆம் நாளன்று ரியாஸ் அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார் (10 மே 2019). அவரைத் தேடி பஸ் டிப்போவுக்குச் சென்ற பொலிசார் பின்னர் அவரது வீட்டிற்கு வந்திருக்கின்றனர். *கணவர் என்டிஜே உறுப்பினர் அல்ல அவர் ஏன் கூட்டிச் செல்லப்படுகின்றார் என ரினோசா கேட்டிருக்கின்றார். அதற்கான காரணம் அவர் நுவரெலியாவுக்குப் பிரசங்கத்திற்குச் சென்றமை என அவர்கள் கூறியிருக்கின்றனர் (பிரசங்கத்தினைப் பொலிசார் பயிற்சி எனக் குறிப்பிட்டிருக்கின்றனர்). ரியாசைக் கைது செய்கையில் *ரெனோசா 5 மாதக் கர்ப்பிணியாக இருந்தார். ரெனோசா செப்டெம்பரில் குழந்தையினைப் பிரசவித்தார். ஆனால் பிறந்த பின்னர் குழந்தை இறந்து விட்டது.

"எனது கணவர் கைதுசெய்யப்பட்ட உடனேயே எனது அயலவர்கள் அனைவரும் என்னிடம் வந்து எனது கணவர் குற்றமற்றவர் என்றும் அவர் கைது செய்யப்பட்டிருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டனர். ரமழான் மாதத்தின் ஒவ்வொரு நாள் மாலையும் அவர்கள் என்னிடம் வந்து எனக்கு ஆறுதல் கூறி என்னிடம் தைரியமாக இருக்குமாறு கூறிச் செல்வார்கள். நான் தீவிர கண்காணிப்பின் கீழ் இருக்கின்ற காரணத்தினால் எனது சகோதரர்கள் எனது வீட்டிற்கு வருவதில்லை. மேலும் அவர்கள் வேறு வேறு பள்ளிவாயல்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் எங்கள் குடும்பங்களுக்கு இடையிலும் சில பதற்றங்கள் காணப்படுகின்றன.

தற்போது *ரெனோசா அவரின் பிள்ளைகளுடன் தனது தாயும் சகோதரியும் வாழும் வீட்டு வளவிலேயே வாழ்ந்து வருகின்றார். தனது கணவரின் சகோதர சகோதரிகளின் தயவிலேயே ரெனோசா முற்றுமுழுவதும் தங்கியிருக்கின்றார். இதனை அவர் விரும்பவில்லை. ஏனெனில் ரெனோசாவின் கணவரே அவர்களை எப்போதும் கவனித்திருக்கின்றார். "நான் கணவரைச் சந்திக்கச் செல்லும்போதெல்லாம் நாங்கள் எவ்வாறு சமாளித்து வாழ்கின்றோம் என்று என் கணவர் என்னிடம் கேட்பார்" என ரெனோசா கூறினார். அவர் இன்னும் இரண்டு பேருடன் சிறைக்கூண்டில் இருக்கின்றார். ரெனோசாவுக்கு இப்போது அவர்களைத் தெரியும். இக்குடும்பங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள தங்களின் குடும்ப உறுப்பினர்களைக் காண ஒன்றாகவே பயணம் செய்கின்றன. அரை நாள் பயணம் செய்யும் இவர்களுக்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள உறவினர்களுடன் பேச 20 நிமிடங்கள் மட்டுமே வழங்கப்படுகின்றது. கிறிஸ்மஸ் பண்டிகையின்போது தனது பிள்ளைகளை அவர்களின் தந்தையைக் காண்பதற்காக இவர் இரண்டு தரம் அழைத்துச் செல்லக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

எனது கணவரை 14 நாட்களுக்கொரு தடவை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தாலும் அவரைப் பார்ப்பதற்கோ அல்லது அவருடன் பேசுவதற்கோ அல்லது நீதிமன்றத்தினுள் செல்வதற்கோ எங்களை அனுமதிப்பதில்லை. ஏனைய தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரினதும்

குடும்பங்கள் நீதிமன்றத்தினுள் செல்கின்றனர். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களின் குடும்பங்களை அவர்கள் அனுமதிப்பதில்லை. நீதிபதியின் கட்டளையினையே தாங்கள் பின்பற்றுவதாகப் பொலிசார் எங்களிடம் கூறினர். அவர்கள் பஸ்சில் வருகையில் அல்லது நீதிமன்றத்திற்குள் செல்கையில் அல்லது நீதிமன்றத்தில் இருந்து வெளியே வருகையில் மாத்திரமே எங்களால் அவர்களை ஒரு தடவையாவது பார்க்க முடியும். சைகை மொழியில்தான் நாங்கள் அவர்களுடன் பேச முயற்சிக்கின்றோம்.

"வெள்ளிக்கிழமைகள் எனக்குக் குறிப்பாகக் கடினமானவையாகும். ஏனெனில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எனது கணவர் என் பிள்ளைகளைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்வதை வழமையாகக் கொண்டிருந்தார். வெள்ளிக்கிழமைகள் வருகையில் என் பிள்ளைகள் தந்தை இல்லையே என்று நினைத்து வருந்துகின்றனர்," என ரெனோசா வருத்தப்பட்டார். "நான் வீட்டில் இருந்து டியூசன் வகுப்புக்கள் நடத்திவந்தேன். ஆனால் கணவன் கைதுசெய்யப்பட்டதில் இருந்தும் எனது பிறந்த குழந்தை இறந்ததில் இருந்தும் கற்பிக்கும் மனநிலையில் நான் இல்லை. மேலும் கணவனின் வழக்கிற்காக ஓடித்திரிவதாலும் பிள்ளைகளைக் கவனிக்கவேண்டியிருப்பதாலும் எனக்கு நேரம் கிடைப்பதில்லை. எனது காயம் ஆறியதும் (சிசேரியன் சத்திரசிகிச்சை வெட்டு) நான் மீண்டும் கற்பிக்க எண்ணியுள்ளேன்." என அவர் கூறினார்.

*ஆடைத் தொழிற்சாலைகளுக்காகத் துண்டுகளைத் தைத்துக் கொடுப்பதைப் பற்றி ரெனோசா பரிசீலித்து வருகின்றார். நீண்ட ஆடைக்காக (மெக்சி) 15 ரூபாவும் பாவாடைக்காக 5 ரூபாவும் என மிகக் குறைந்த தொகையே அவருக்குக் கிடைக்கும். மெக்சியினை 700 ரூபாவிற்கு விற்கின்றனர் (300 ரூபா துணிக்கும் 15 ரூபா தையலுக்கும்). இவ்வாறு விற்றுப் பெரும் லாபத்தினை ஈட்டுகின்றனர். ஆனால் தைத்துக் கொடுக்கும் பெண்களுக்குக் கிடைப்பதோ மிகவும் அற்பமான தொகையே.

ரெனோசாவின் குடும்பத்தினைப் போன்ற பல குடும்பங்கள் ஆரம்பத்தில் ரகீப் என்ற சட்டத்தரணியிடம் தங்களின் சம்பந்தப்பட்ட கோப்புக்களைத் தயாரிப்பதற்காகத் தலா 10000.00 ரூபா செலுத்தியுள்ளனர். ஆனால் அச்சட்டத்தரணி அவர்களுக்காக ஒருபோதும் ஆஜராகவில்லை. இதனால் அவர்கள் ரதீப் என்ற வேறொரு சட்டத்தரணிக்குக் கட்டணம் செலுத்தவேண்டி நேரிட்டது. அவர் வழக்குகளைப் பாரமெடுத்துள்ளார். இக்குடும்பங்களின் பணத்தினை ரகீப் திரும்பிக் கொடுக்கவே இல்லை.

நேர்காணலின் போது ரேசோனாவின் மாதாந்தச் செலவுகள் சுமார் 50000.00 ரூபா எனத் தெரியவந்தது. இதில் பிள்ளைகளின் படிப்புச் செலவான 12000.00 ரூபாவும் அடங்குகின்றது. தனது பிள்ளைகளின் பாடசாலைச் செலவுகளுக்கே அவர் முன்னுரிமை வழங்குகின்றார்.

**குடும்பம் – *சாஹிரா (மனைவி), 31, கிழக்கு மாகாணம், இலங்கை**
**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் - உமர்* (கணவர்), 38**
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் - திருகோணமலைச் சிறைச்சாலை**
**குற்றச்சாட்டு - 2017 இல் அலியார் சந்தி மோதலில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படல்**
**தொழில் - தையற்காரர்**
**திருமண அந்தஸ்து - திருமணமானவர் - 2 பிள்ளைகள் (மகன் - 6, மகள் 10).**
**தங்கியிருப்போர் - மனைவியும் 2 பிள்ளைளும்**
**பயணக் கொடுப்பனவு - 45 நாட்களுக்கொரு தடவை ஐசிஆர்சியிடமிருந்து (2020 ஜனவரி 11 ஆம் திகதி பெற்றுக்கொண்டது)**

2017 இல் சஹ்ரானும் அவரது சகாக்களும் முஸ்லிம்களின் மற்றுமொரு பிரிவினருடன் காத்தான்குடியில் அலியார் சந்தியில் பெரும் மோதலில் ஈடுபட்டனர். 2019 மே 13 ஆம் திகதி கல்முனைப் பொலிசாரால் *உமர் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் தவறாகக் கைதுசெய்யப்பட்டுவிட்டார் என்ற அடிப்படையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் 2017 மோதலில் சம்பந்தப்பட்டவர்களின் பட்டியலில் அவரின் பெயர் இருப்பதாகக் கூறி அவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

*இரண்டு வாரங்களுக்கொரு தடவை தனது கணவனைப் பார்க்கச் செல்வதற்குச் சாஹிரா முயற்சிக்கின்றார். வீட்டில் சமைத்த உணவினைக் கணவருக்கு வழங்க சாஹிரா அனுமதிக்கப்படுவதில்லை. உணவுப் பொதி மட்டுமே அனுமதிக்கப்படுகின்றது. பிள்ளைகளுக்கு நேரம் இருந்தால் அவர் பிள்ளைகளையும் தந்தையைப் பார்க்கக் கூட்டிச் செல்கின்றார். “பார்க்கச் செல்வோருக்கும் தடுத்துவைக்கப்பட்டிருப்போருக்கும் இடையில் ஒரு சிறிய கம்பி வலைத் தடுப்பு இருக்கின்றது. இரு சாராருக்கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பதாலும் ஒரே நேரத்தில் பலரும் விஜயம் செய்வதாலும் கதைப்பதற்காகக் கம்பி வலையின் ஊடே உரத்துக் கத்தவேண்டியிருக்கின்றது. பேசுவதற்கு எங்களுக்கு 5 நிமிடங்கள் மாத்திரமே வழங்கப்படுகின்றது.” என சாஹிரா கூறினார். கிறிஸ்மஸ் தினத்தன்று குடும்பங்களுக்கு 15 நிமிடங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள தங்கள் உறவுகளுடன் பேச அனுமதி வழங்கப்பட்டது. ஒரு மேசையின் குறுக்கே அமர்ந்தவாறு இரு சாராரும் பேச அனுமதிக்கப்பட்டனர். “இவ்வாறான திறந்த நாளில் பிள்ளைகளை நான் அவர்களின் தந்தையைப் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றேன். ஆனால் பிள்ளைகளை அவரால் தொடக்கூட முடியவில்லை. அல்லது எனது மகன் பாடசாலை சென்ற முதல் நாள் புகைப்படத்தினை அவரின் கையால் எடுத்துப்

பார்க்கக்கூட முடியவில்லை. அவர் பார்ப்பதற்காக நான் அதனைப் பிடித்துக் காட்டினேன்." எனக் கூறி அவர் அழுதார்.

"நாங்கள் வீடு திரும்பியபோது நான் எனது மகனிடம் தந்தை சிறையில் இருக்கின்றார் எனக் கூறவேண்டாம் எனக் கூறினேன். மகனுக்குப் பாடசாலையில் பிரச்சினை வருவதை நான் விரும்பவில்லை. தந்தை மட்டக்களப்பில் ஒரு கடையில் வேலை செய்கின்றார் எனக் கூறுமாறு சொன்னேன். நான் ஏன் பொய் சொல்லவேண்டும் என என் மகன் என்னிடம் கேட்டான். நான் மிகவும் வெட்கப்பட்டேன். நம்பிக்கையினையும் இழந்தேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமலுள்ளது. சஹ்ரான் எங்களின் வாழ்க்கையினையே அழித்துவிட்டான். எனது கணவர் குற்றமற்றவர். தயவுசெய்து ஏதாவது செய்து எனது கணவரை வெளியில் எடுங்கள்," என சாஹிரா கெஞ்சினார்.

தனது கணவர் கைது செய்யப்பட்டதில் இருந்து கடந்த 18 மாதங்களாகத் தனது சீவியத்தினை நடத்துவதற்காக யாரிடமும் உதவி கேட்க விரும்பாத சாஹிரா வீட்டுப் பாவனைப் பொருட்களையும் தனிப்பட்ட தேவைகளுக்கான பொருட்களையும் விற்பனை செய்து வாழ்ந்து வருகின்றார். அவர் ஆடைத் தொழிற்சாலைகளுக்காகத் தைத்த சில துண்டுகளையும் விற்பனை செய்துள்ளார். சிறிறு பணத்தினைப் பெறுவதற்காகத் தையல் இயந்திரத்தினையும் விற்குமாறு கணவன் சாஹிராவிடம் கூறியுள்ளார்.

தைக்கப்படாத துண்டுகளைக் கணவர் வீட்டுக்குக் கொண்டுவந்து தைத்த துண்டுகளைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்வார். தொழிற்சாலைகளுக்குத் தைத்த துண்டுகளை விநியோகிக்கும் பணியினைக் காத்தான்குடியில் உள்ள ஆண்களே செய்கின்றனர். இதனால் அந்நிய ஆண்கள் வீட்டுக்குள் வந்து போவதை விரும்பாத சாஹிரா தனது கணவன் கைதுசெய்யப்பட்ட உடனேயே தைப்பதை நிறுத்திவிட்டார். சிறிது காலம் சாஹிராவின் நண்பி ஒருவரின் கணவர் தைப்பதற்காகத் துண்டுகளைக் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்தார். ஆனால் அண்மைக் காலமாக இவரின் நண்பி தொலைபேசி அழைப்புக்களுக்குப் பதிலளிக்காத காரணத்தினால் தைப்பதற்குத் துண்டுகளை எடுப்பதற்கு இவருக்கு வழியில்லாமல் இருக்கின்றது.

தாக்குதல் நடத்தப்பட்ட உடனேயே சாஹிராவையும் அவரின் குடும்பத்தினையும் சகலரும் விலக்கிவைக்க ஆரம்பித்தனர். இவருக்கு உதவி செய்ய யாரும் இருக்கவில்லை. இப்போது நிலைமை சற்று மாறியிருக்கின்றது. வெளிநாட்டில் வாழும் இவரின் உறவினர் ஒருவர் இவருக்குச் சிறிது உதவுவதற்கு முயற்சி செய்கின்றார். ஆனால் உதவி கேட்க சாஹிரா விருப்பப்படவில்லை. "எங்களுக்குத் தேவையானதை எனது கணவர் எப்போதும் வழங்கி வந்தார். தம்மைச் சரியாகக் கவனிக்காத காரணத்தினாலும் அல்லது மோசமாக நடத்துகின்ற காரணத்தினாலும் ஹாதி நீதிமன்றத்திற்கு அலைந்து

திரியும் பெண்களின் கதைகளை நாம் கேட்கின்றோம். எனது கணவன் என்னை எப்போதும் கவனித்துக் கொண்டதால் எனக்கு இப்படி ஒரு துயர நிலை வரும் என நான் ஒருபோதும் நினைத்ததில்லை," எனக் கூறினார்.

தனது வீட்டிற்கும் தொழிற்சாலைக்கும் இடையில் துண்டுகளை எடுத்துச் செல்லப் பெண் உதவியாளர் ஒருவர் தேவை என்பதை நேர்காணலின் போது இவர் குறிப்பிட்டார்.

**குடும்பம் - *ரசீதா (தாய்), 67, கிழக்கு மாகாணம், இலங்கை**
**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் – *அஸ்மா (மகள்), 36**
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் - தும்பறைச் சிறைச்சாலை**
**குற்றச்சாட்டு - பயங்கரவாதத்திற்கு உதவிசெய்ததும் உடந்தையாயிருந்ததும் (என்டிஜே தலைவர் நியாசின் மனைவி)**
**தொழில் - பகுதிநேரத் தையற்காரி மற்றும் இல்லத்தரசி**
**திருமன அந்தஸ்து - திருமணமானவர் – 3 பிள்ளைகள் (2 மகள்மார் – 7 & 10 & மகன் – சுமார் 6 மாதங்கள்)**
**தங்கியிருப்போர் - தாய் மற்றும் 3 பிள்ளைகள்.**
**பயணக் கொடுப்பனவு - ஐசிஆர்சியிடம் இருந்து 45 நாட்களுக்கொரு தடவை 3200 ரூபா (2020 ஜனவரி 11 இல் பெற்றுக்கொள்ளப்பட்டது)**

*அஸ்மாவின் கணவரான நியாஸ், 2017 இல் இருந்து மத்திய கிழக்கில் பணியாற்றி வந்தார். இவர் 2019 இல் இலங்கைக்குத் திரும்பினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்த இரண்டாம் நாள் தனது பொதியினையும் தனது தொலைபேசியினையும் தனது மனைவியின் தொலைபேசியினையும் எடுத்துக்கொண்டு எங்கே செல்கின்றார் என அஸ்மாவுக்குச் சொல்லாமல் வீட்டை விட்டுச் சென்றுவிட்டார். *நியாஸ் வீட்டில் இருந்து சென்றுவிட்டார் என அஸ்மா அவரின் தாயாரிடம் கூறினார். ஏப்ரில் 26 ஆம் திகதி அம்பாறை, சாய்ந்தமருதில் தற்கொலைக் குண்டு வெடிப்புப் பற்றி நாம் கேள்விப்பட்டோம். பின்னர் 2019 ஏப்ரில் 27 ஆம் திகதி நியாசின் படத்தினைக் கொண்டுவந்த பொலிசார் நியாஸ் சாய்ந்தமருது வீட்டில் இருந்ததால் அவரின் சடலத்தினை அடையாளம் காண வருமாறு அஸ்மாவை அழைத்தனர். வீட்டைச் சோதனையிட்ட பொலிசார் அஸ்மாவின் மருத்துவக் கோப்பினையும் மோட்டார் சைக்கிளையும் கண்டுபிடித்தனர். இவற்றுள் பதிவுப் புத்தகத்தினையும் திறப்பினையும் அவர்கள் எடுத்துச் சென்றனர். சடலத்தினை அடையாளம் கண்ட பின்னர் அஸ்மா அவரின் வீட்டிற்குத் திரும்பி வந்தார். ஏப்ரில் 28 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து அஸ்மா தனது சகோதரருடன் சென்றார். தனது கணவனின் உடல் ஒப்படைக்கப்படவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். அவர்கள் அம்பாறைப் பிணவறைக்குச் சென்றதும் பொலிஸ் ஓஐசி அங்கே இல்லை என

அவரிடம் கூறப்பட்டது. அவரை இரவு அங்கே தங்குமாறும் சடலம் காலையில் ஒப்படைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. அன்றிரவு தடுத்துவைப்புக் கட்டளையினை விநியோகித்த அவர்கள் அவரை மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றினர். அச்சந்தர்ப்பத்தில் அஸ்மா 5 மாதக் கர்ப்பிணியாக இருந்தார். 3 மாதங்களின் பின்னர் அவர் சிறையில் குழந்தையினைப் பிரசவித்ததைத் தொடர்ந்து 7 நாட்களின் பின்னர் தும்பறைச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

"அவர்கள் மட்டக்களப்புச் சிறையில் இருந்தபோது நான் எனது மகளையும் பேரனையும் பார்க்க நாளாந்தம் செல்வேன். இப்போது என்னால் அவர்களைப் பார்க்க இரண்டு வாரங்களுக்கொரு தடவையே செல்ல முடிகின்றது. மட்டக்களப்பு சிறையில் அவர்கள் இருந்தபோது நான் அவர்களுக்காக மின்விசிறி ஒன்றினையும் நீர் சூடாக்கும் ஹீட்டர் ஒன்றினையும் வாங்கினேன். ஆனால் அவை தும்பறைச் சிறைக்கு அனுப்பப்படவில்லை. மட்டக்களப்புச் சிறையில் வேறு ஒரு தாய் அதனால் நன்மையடைவார் என நான் எதிர்பார்க்கின்றேன். எனது மகளுக்குக் குளிரில் இருந்து பழக்கம் இல்லை. அதனால் அவர் அடிக்கடி சுகவீனம் அடைகின்றார். எனவே அவர் தன்னை மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றுமாறு நீதிபதியிடம் விசேட வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்தார். ஆனால் நீதிபதி அது தனது நியாயாதிக்கத்தின் கீழ் இல்லை எனக் கூறிவிட்டார். எனது மகளுக்கு என்டிஜே பற்றி எதுவும் தெரியாது." என அஸ்மாவின் தாய் மனவருத்தப்பட்டார். மேலும் அஸ்மாவின் குற்றப் பத்திரிகையில் அஸ்மா ஒளிந்திருக்கையில் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் எழுதியுள்ளனர். ஆனால் பொலிசார் அழைத்தவுடன் அவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுவிட்டார். ஒளித்திருக்கவில்லை.

"இரண்டு வாரங்களுக்கொரு தடவை தும்பறைக்குப் போவதற்கு வேனுக்காக ஒரு ஆசனத்திற்கு 2000 ரூபா செலுத்தவேண்டியுள்ளது. என்னால் முடிந்தபோது பிள்ளைகளையும் கூட்டிச் செல்வதற்கு நான் முயற்சிக்கின்றேன். மேலும் கருவாடு, இறைச்சி, பால்மா, சுகாதாரத் துவாலைகள், அணையாடைப் பொதி போன்றவற்றினையும் நான் எடுத்துச் செல்ல முயற்சிக்கின்றேன். ஆனால் இவை செலவு கூடியவையாக இருக்கின்றன. என்டிஜே உறுப்பினர்கள் சீதனம் வாங்குவதில்லை. எனவே திருமணத்தின் பின்னர் அவர்கள் வாடகை வீட்டிலேயே வாழ்ந்துவந்தனர். எனது மகள் தையல் வேலை பார்த்துவந்தார். ஆனால் மகளின் கணவர் திருமணத்தின் பின்னர் மகள் வேலை செய்வதை நிறுத்திவிட்டார். கணவர் மத்திய கிழக்கில் சாரதியாக வேலை பாரத்தார். மகளுக்கு மாதாந்தம் 40000 ரூபா அனுப்பிவந்தார். எனது மகள் பெருநாள் நேரங்களில் ஆடைகளைத் தைத்து மேலதிக வருமானத்திற்காக அவற்றினை விற்றுவந்தார்.

"எனது மூத்த பேத்தி மிகவும் கெட்டிக்காரி. அவள் 5 ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்போது படித்துக்கொண்டிருக்கின்றாள். டியூசனுக்கு

மாதம் 750 ரூபா செலவாகின்றது. இதனால் தான் வீட்டில் படிக்கப்போவதாக அவள் என்னிடம் கூறினாள். இவ்வாறு செய்வதால் தாயின் வழக்கிற்காகவும் சிறைச்சாலை விஜயத்திற்காகவும் பணத்தினைச் சேமிக்க முடியும் என அவள் என்னிடம் கூறினாள். எனது உள்ளம் நொறுங்கிவிட்டது. ஏனைய பிள்ளைகள் எல்லாம் டியூசனுக்குச் செல்லும்போது சிறந்த பெறுபேற்றினை அடையவேண்டுமாயின் இவளும் டியூசனுக்குப் போகவேண்டும்." என *அஸ்மாவின் தாய் கூறினார்.

*ரசீதாவின் இதய நாளத்தில் இரண்டு அடைப்புக்கள் உள்ளன. யாழ்ப்பான வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்புச் சிறையில் விட்டுவிட்டு வந்த குழந்தையின் தலையணையினை எடுக்க இவர் சென்றபோது அனைவரும் முகக்கவசம் அணிந்திருந்தனர். இவர் வயது முதிர்ந்தவராக இருந்த காரணத்தினால் சிறைச்சாலையில் பரவியுள்ள வைரஸ் இவருக்கும் தொற்றிவிடும் என்பதால் இவரை உள்ளே வரவேண்டாம் எனக் காவலர்கள் கூறிவிட்டனர்.

"எனது மகளும் பேரப்பிள்ளையும் குளிருக்குப் பழக்கப்படாதவர்கள் என்பதால் நான் அவர்களின் ஆரோக்கியம் பற்றி மிகவும் கவலைப்படுகின்றேன். சிறையில் அவர்களைப் பார்ப்பதற்கு அப்பால் அவர்களை 14 நாட்களுக்கு ஒரு தடவை மட்டக்களப்பு நீதிமன்றத்திற்குக் கொண்டுவரும்போது மாத்திரமே எனக்கு அவர்களை ஒரு பார்வை பாரக்கக் கிடைக்கின்றது." எனக் கூறினார்.

இவர் தனது பேத்தியின் மாதாந்த டியூசனுக்கு 750 ரூபா செலுத்துவதற்கான உதவியினையும் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான செலவுக்கான உதவியினையும் எதிர்பார்க்கின்றார். ஏனெனில் இவர் மூப்படைந்தவராகவும் நோயாளியாகவும் எவ்வித வருமானமும் அற்றவராக இருக்கின்றார்.

**குடும்பம் -** *__நதீஹா (தாய்)__, **59, கிழக்கு மாகாணம்**, **இலங்கை**
**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் –** *__நிஹால் (மகன்)__, 18
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம்** - **கேகாலைச் சிறை**
**குற்றச்சாட்டு** - **என்டிஜே ஏற்பாடு செய்த நுவரெலிய பிரச்சாரத்திற்குச் சென்றமை**
**தொழில் - மாணவன்**

"இலவசமாக இளைஞர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்வது இங்கே வழமையான ஒரு நிகழ்வாகும். ஹிஸ்புல்லா கட்டுகின்ற இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தினைப் பார்க்க அவர் பஸ் நிறைய ஆட்களை இலவசமாக உணவும் வழங்கி அழைத்துச் சென்றிருக்கின்றார். அடிக்கடி மக்கள் இலவசமாக ஜமாஅத் ஏற்பாடு செய்வது இங்கே வழமையானதாகும். எனவே இலவசமாகப்

பிரசங்கத்திற்குச் செல்வதற்கு நுவரெலியாவுக்கு வருமாறு பையன்களை அழைத்தமை அசாதாரணமான ஒன்றாகக் கருதப்படவில்லை. அடுத்ததாக அவர்கள் நுவரெலியாவுக்கு இதற்கு முன்னர் சென்றதில்லை. எனவே ஒரு புதிய இடத்தினைப் பார்ப்பதற்கான ஆர்வம் அவர்களுக்கு இருந்தது." என நதீஹா கூறினார்.

*வெள்ளிக்கிழமை மதிய உணவின் பின்னர் 1 மணியளவில் சென்ற நிஹால் ஞாயிறு அதிகாலையில் வீடு திரும்பிவிட்டார். நான் அவரிடம் அங்கே என்ன நடந்தது என்று கேட்டதற்கு அவர் அங்கே பிரசங்கம் நடந்தது, உணவு வழங்கினார்கள், தூங்கினோம் பின்னர் வந்துவிட்டோம் எனக் கூறினார். ஆனால் பிரசங்கத்தின் பின்னர் சஹ்ரான் வாளுடன் வெளியே வந்து பிரசங்கத்தில் கூறப்பட்டவற்றை யாருக்கும் கூறக்கூடாது எனப் பையன்களை அச்சுறுத்தியதாக நாங்கள் பின்னரே கேள்விப்பட்டோம். அதனால் யாரும் பேசவில்லை." என அவர் குறிப்பிட்டார்.

2019 மே 09 ஆம் திகதி இவர்களின் வீட்டிற்கு வந்த பொலிசார் மில்ஹானின் புகைப்படம் தங்களுக்கு வேண்டும் எனக் கூறினர். அவர்கள் வந்திருந்தபோது நோன்புடன் வீட்டின் பின்பக்கம் படித்துக்கொண்டிருந்த மில்ஹானின் இளைய சகோதரர் நிஹால் வெளியே சென்றார். பொலிசார் அவரிடம் அவரது அடையாள அட்டையினைக் கொண்டுவருமாறும் தங்களுடன் விசாரணைக்கு வருமாறும் கேட்டனர். பொலிசார் தமிழில் மிகவும் நயமாகவே பேசினர். பின்னர் அவரைக் கூட்டிச் சென்றனர். சிறிது நேரத்தின் பின்னர் நிஹாலின் தந்தை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நிஹால் எங்கே என்று கேட்டதற்கு அவர்கள் நிஹால் அங்கே இல்லை என்று கூறிவிட்டார்கள். பின்னர் மகனை அழைத்துவர நதீஹா சென்றார். நதீஹாவிடம் மகனைக் காட்டிய அவர்கள் மகன் மிகவும் இளையவராக இருப்பதால் (18) அவரிடம் இருந்து இயலுமான அளவு தகவல்களைத் தாம் பெறவிரும்புவதாகக் குறிப்பிட்டனர். நிஹால் என்டிஜேயில் சம்பந்தப்படவில்லை என்றும் அவரை விடுவிக்குமாறும் அவர் பொலிசாரிடம் கூறினார். அதற்கு அவர்கள் நிஹாலை இன்னும் விசாரித்துத் தகவல்களைப் பெறவேண்டியுள்ளது எனக் கூறினர்.

அடுத்த நாள் மதியம் வரை அவர்கள் அவரை விசாரித்தனர். பின்னர் அவரின் தாயிடம் காலை உணவும் மாற்று உடையும் கொண்டுவருமாறு கூறினர். வெள்ளிக்கிழமை 2 அல்லது 2.30 மணியளவில் அவர் உணவுடனும் ஆடைகளுடனும் வந்தார். ஆனால் மகன் கைவிலங்கிடப்பட்ட நிலையில் இருப்பதை அவர் கண்டார். நிஹாலை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லவேண்டியிருப்பதால் அவருக்கு எதையும் கொடுக்க முடியாது எனக் கூறிவிட்டனர். இருந்தாலும் அவர் சண்டை பிடித்து உணவும் உடையும் வழங்கினார். பின்னர் கைவிலங்கிடப்பட்ட 10 பேர் இருவர் இருவராக பொலிஸ் ஜீப்பில் ஏற்றிச் செல்லப்படுவதை அவர் கண்டார். அவர் பின்தொடர முயற்சித்த போது பொலிசார் அவரை மறித்து வரவேண்டாம் எனக் கூறியுள்ளார்கள்.

பின்னர் நிஹால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பதை அவர் கேள்விப்பட்டார். அதன் பின்னர் அவரைச் சிறையில்தான் அவர் பார்த்தார்.

*67 வயதான நிஹாலின் தந்தை மிகவும் நோய்வாய்ப்பட்டவர். அவர் ஒரு மெகானிக். கொழும்பில் 4 ஆம் மாடியில் சிஐடி தலைமையகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தனது மூத்த மகனான மில்ஹானைப் பார்க்க அவர் அண்மையில் சென்றுள்ளார். "எங்களுக்கு 27 வயதான அங்கவீனமான மற்றுமொரு மகன் இருக்கின்றார். அவரால் சுயமாக இயங்க முடியாது. நாங்கள்தான் அவரைக் குளிப்பாட்டி, ஆடை அணிவித்து, உணவூட்டி விடவேண்டும். கபொத சாதாரண தரம் பயிலும் ஒரு மகளும் எங்களுக்கு இருக்கின்றார். மில்ஹான்தான் குடும்பத்தினைப் பிரதானமாகக் கவனித்துவந்தார்.

"*நிஹால் மட்டக்களப்புச் சிறையில் இருந்தேபோது கணினியிலும் ஏனைய பாடங்களிலும் அவருக்குப் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. கைதுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் சிலர் அங்கே இருந்தனர். அவர் தனது உயர்தரப் பரீட்சைக்குப் படிக்க விரும்புகின்றார். ஆனால் அதிகாரிகள் சிறைச்சாலைக்குள் புத்தகங்களை எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை. அவர் கேகாலைச் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கே அவருக்குப் படிப்பிக்க யாரும் இல்லை. எனது கணவன் அவருக்குப் பாடக் குறிப்புக்கள் சிலவற்றினை வழங்க முயற்சித்தார். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர். அடுத்த தடவை நான் விஜயம் செய்கையில் எனது அதிர்ஷ்டத்தினை முயற்சிப்பேன்.

*தற்போது நிஹாலின் தந்தை மாத்திரமே உழைக்கின்றார். ஆனால் அவரும் எமது மகனின் வழக்கு விடயமாக ஒடித்திரிகின்றார். இதனால் நாங்கள் கடனுக்குப் பணம் பெறவேண்டியிருக்கின்றது. ஏனெனில் நாங்கள் இரண்டு மகன்களையும் மருமகளையும் பார்க்க முறையே கேகாலை, கொழும்பு மற்றும் திருகோணமலை என 3 இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது.

"நான் முதற்தடவை பார்க்கச் சென்றபோது எனது மூத்த மகனின் மனைவி மயங்கி விழுந்துவிட்டார். அவர் மில்ஹானைப் பற்றிக் கேட்டார். அவர் மிகவும் அப்பாவியானவர். அவருக்கு எதுவும் தெரியாது. நடந்த அனைத்து விடயங்களாலும் அவர் அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கின்றார். அவர் வேறாகப் பெண்கள் பகுதியில் வைக்கப்பட்டுள்ளார்" எனக் கூறினார். நதீஹாவினால் தைக்க முடியும். ஆனால் இப்போது அவருக்கு நேரம் இல்லை என அவர் கூறினார்.

*நதீஹாவிற்கும் இதயக் கோளாறு உண்டு. மேலும் அவருக்குப் பித்தப் பையில் கல் உண்டு. ஆனால் அவருக்குச் சத்திரசிகிச்சை செய்ய முடியாது. ஏனெனில் அவர் ஒரு இதய நோயாளி. கல்லினால் அவர் மிகுந்த வலியினை அனுபவிக்கின்றார். அவர் மிகவும் நோயுற்றிருப்பதால் அவருக்கு யாழ்ப்பாணத்தில் அன்ஜியோகிராம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்கள் மிகுந்த பண நெருக்கடியில் உள்ளனர். ஏனெனில் இரண்டு பெற்றோருமே நோயாளிகள். பராமரிப்பதற்கு 2 பிள்ளைகள் உள்ளனர். 3 வெவ்வேறு இடங்களில் உள்ள சிறைகளுக்கு அடிக்கடி செல்வது வறியவர்களான இவர்களுக்குப் பணச் செலவினை ஏற்படுத்துகின்ற விடயமாக உள்ளது.

**குடும்பம் - *பரீதா (மனைவி), 37, கிழக்கு மாகாணம், இலங்கை**
**தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் - *அஹமட் (கணவன்), 39**
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் - பதுளைச் சிறை**
**குற்றச்சாட்டு - என்டிஜேயினால் நடத்தப்பட்ட பதிவுசெய்யப்பட்ட இஸ்லாமிய அறக்கொடை நிறுவனத்திற்காக 2015 இல் இணையப் பக்கத்தினை உருவாக்கியமை**
**தொழில் - 20 வருடங்களாகக் கணினி ஆசிரியர், சொந்தமாகக் கணினிக் கடை உண்டு**
**தங்கியுள்ளோர் - மனைவியும் 3 பிள்ளைகளும் (2 மகள்கள் 8 & 10 & 1 மகன் 1.5 வயது)**
**பயணக் கொடுப்பனவு - 5650.00 ரூபா ஐசிஆர்சியிடம் இருந்து 45 நாட்களுக்கொரு தடவை (2020 ஜனவரி 11 இல் பெற்றுக்கொண்டது)**

மே மாதம் 10 ஆம் திகதி நகரத்தில் அஹமடின் கடைக்கு அண்மையில் வாழும் நண்பர் ஒருவர் பரீதாவுக்குத் தொலைபேசி அழைப்பினை எடுத்து அவரின் கணவரைப் பொலிசார் தேடுவதாகக் கூறினார். இதனால் கடைக்குச் சென்ற அஹமட் அவர்கள் சோதனையிடுவதற்காகக் கடையினைத் திறந்துவிட்டார். பரீதாவின் உறவினர் ஒருவர் அவரின் கடைக்கு அருகாமையில் வாழ்ந்து வந்தார். கடைக்கு வெளியே அதிகமான பொலிசாரும் இராணுவத்தினரும் நிற்பதாக அவர் பரீதாவிடம் கூறினார். இதனால் பரீதாவும் அவரின் சகோதரரும் உடனடியாகக் கடைக்கு வந்தனர். அதன் பின்னர் ஒரு வேனிலும் ஜீப்பிலும் அதிகளவு இராணுவத்தினர் வீட்டிற்கு வந்து வீட்டிலுள்ள குப்பை உட்பட அனைத்தையும் சோதனையிட்டனர். “சாமர” என்ற அதிகாரி சிங்களத்தில் எழுதப்பட்ட படிவம் ஒன்றினைக் கொடுத்து அதில் பரீதாவின் ஒப்பத்தினைப் பெற்றுக்கொண்டார். இருந்தாலும் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது எனத் தெரியாமல் அவர் பயத்துடனேயே ஒப்பமிட்டார். பின்னர்தான் அது பிடியாணை என்பதை அவர் அறிந்துகொண்டார்.

அதன் பின்னர் அவரை அவரின் கணினியுடன் அழைத்துச் சென்றனர். கணினியின் சார்ஜரை எடுக்க வந்த பொலிஸ் தாங்கள் விசாரணையின் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகப் பரீதாவிடம் குறிப்பிட்டனர். பின்னர் அவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது கணவர் அங்கே இல்லை எனப் பொலிசார் பரீதாவிடம் கூறினர். தங்களின் விசாரணையினை முடித்துவிட்டு அவரை

அனுப்பிவிடுவோம் எனப் பொலிசார் கூறினர். அன்றைய தினம் கணவர் பற்றி வேறு எந்தச் செய்திகளும் கிடைக்கவில்லை. அடுத்த நாள் (சனி) பரீதாவைத் தொடர்புகொண்ட அவர்கள் பரீதாவிடம் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு காலை உணவுடன் அஹமடைப் பார்க்க வருமாறு அழைத்தனர். " நான் என் கணவரைச் சந்தித்த போது எனக்குத் தெரிந்ததை மாத்திரம் பொலிசிடம் கூறுமாறும் வேறு எதனையும் கூறவேண்டாம் என்றும் அவர் என்னிடம் கூறினார். ஏனெனில் ஒரே கேள்வி அவரிடம் பல தடவைகள் கேட்கப்பட்டுள்ளன" என அவர் கூறினார்.

*என்டிஜே பள்ளிவாயலினால் நடத்தப்படும் அறக்கொடை நிறுவனம் ஒன்றிற்காக 2015 இல் அஹமட் இணையப் பக்கம் ஒன்றினை உருவாக்கினார். அஹமடின் வீட்டிற்கு அண்மையில் வாழும் சஹ்ரானின் சகோதரர் இணையப் பக்கத்தினை உருவாக்குமாறு கேட்டார். "அவர்கள் இன்னும் பாக்கிப் பணமான 6000 ரூபா தரவேண்டும். அவர்கள் எனது கணவருக்கு அப்பணத்தினைச் செலுத்தவில்லை" என அவர் கூறினார்.

"திருமணமாகி 4 வருடங்களின் பின்பே எங்களுக்கு மகள் பிறந்தாள். இதனால் எனது கணவர் எங்கள் மகளில் மிகவும் அன்பு வைத்திருக்கின்றார். மகள் தந்தை எப்போது வருவார் என ஒரே கேட்டுக் கொண்டிருக்கின்றாள். எனது பிள்ளைகளின் கேள்விகளுக்கு நாளாந்தம் பதிலளிப்பது எனக்குக் கவலையினையும் விரக்தியினையும் ஏற்படுத்துகின்றது. இது என்னில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது" எனப் பரீதா கூறினார்.

"எனது மகள் தனது தந்தையினைப் பார்க்கவேண்டும் எனக் கோரி சிங்களத்தில் ஒரு கடிதம் எழுதினார். இதனால் எனது கணவரை 15 நிமிடங்கள் பதுளையில் சந்திப்பதற்கு எமக்கு அனுமதி வழங்கப்பட்டது. நான் எனது பிள்ளைகளை அவர்களின் தந்தையினைப் பார்க்க அழைத்துச் சென்றபோது அவர்கள் எமது குழந்தைப் பிள்ளையினைத் தொடக்கூட அவரை அனுமதிக்கவில்லை. எனது மகள் அவளின் தந்தைக்கு எழுதிய கடிதத்தினைக் கூட அவர்கள் கொடுப்பதற்கு என்னை அனுமதிக்கவில்லை. அக்கடிதம் மனதை உருக்கும் ஒரு கடிதமாகும். மட்டக்களப்பில் நாங்கள் கண்ணாடித் தடுப்பின் வழியேதான் அவருடன் பேசவேண்டியிருந்தது. ஆனால் பதுளையில் எங்களால் அவரை நேரடியாகப் பார்க்க முடியும். நாங்கள் 15 மணித்தியாலங்கள் பயணம் செய்கின்றோம். 15 நிமிடங்கள் மட்டுமே கணவரைப் பார்ப்பதற்காக வீட்டை விட்டு 5.30 மணிக்கு வெளியேறும் நாங்கள் நள்ளிரவில்தான் வீட்டிற்கு வருகின்றோம். 15 நாட்களுக்கொரு தடவை நாங்கள் அவரைப் பார்க்க முயற்சி செய்கின்றோம். சில வேளைகளில் பிள்ளைகளுடனும் சில வேளைகளில் தனியாகவும் செல்கின்றேன். மிகவும் களைப்பூட்டும் பயணமாக இருந்தாலும் குறைந்தது எங்களால் அவரைப் பார்க்கவாவது முடிகின்றது. அது போதும். மட்டக்களப்புச் சிறையினை விட பதுளைச் சிறை சிறந்த நிலைமையில் உள்ளது. ஆனால் பயணம் செய்வது மிகவும் கடினமானது. எனக்கு அவரை எப்படியாவது

வெளியே எடுக்கவேண்டும்! இதிலுள்ள பிரதான பிரச்சினை என்னவென்றால் இந்த ஒரு குற்றச்சாட்டின் கீழ் 65 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் அவரை விடுவித்து வெளியில் கொண்டுவருவது மிகவும் கடினமானதாகும்” என பரீதா கூறினார்.

*பரீதாவும் படித்திருக்கின்றார். அவர் தகவல் தொழில்நுட்பமும் ஆங்கிலமும் படித்திருக்கின்றார். வீட்டில் வைத்து சுமார் 20 மாணவர்களுக்கு 5 பாடங்களில் டியூசன் கொடுத்திருக்கின்றார். ஆனால் இப்போது தனது கணவனின் வழக்குக் காரணமாகவும் கற்பிக்கும் மனநிலை இல்லாத காரணத்தினாலும் டியூசன் கொடுப்பதை நிறுத்திவிட்டார்.

“எல்லோரும் என்னுடன் அன்பாக நடந்துகொள்கின்றனர். ஏனெனில் எனது கணவர் குற்றமற்றவர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் சாதாரணமாக அனைவரும் செல்லும் பள்ளிவாயலுக்குத்தான் செல்வார். பள்ளிவாயல் சம்மேளனத்தின் சார்பில் மாதாந்தம் ஏழை வரியினை வசூலிப்பதற்கு அவர் பொறுப்பாக இருந்தார். இந்த வருடம்தான் செய்தி மடலில் அவரின் பெயர் வரவில்லை,” என அவர் கூறினார்.

“பாடசாலைக்குச் சென்ற முதல் நாள் எனது மகள் தந்தையுடன் நின்று ஒரு புகைப்படம் எடுக்க விரும்பினார். ஆனால் அவர் இல்லாத காரணத்தினால் அவரின் புகைப்படத்தினை வைத்து என்னைப் புகைப்படம் எடுக்குமாறு கூறினார். இது மனதை மிகவும் உருக்குவதாக இருந்தது” என *பரீதா கூறினார்.

தனது மனநிலை சரியான உடனேயே டியூசனை ஆரம்பிக்க பரீதா எதிர்பார்த்திருக்கின்றார். பரீதாவிடம் தையல் இயந்திரம் ஒன்றும் இருக்கின்றது. அவருக்கு வேலை கிடைத்தால் தையல் தொடங்கவும் முடியும்.

**குடும்பம்** – ***ஹுஸ்னா (தாய், மனைவி)**, 37, **வட மேல் மாகாணம்**, **இலங்கை**
**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் - *முஜீப் (மகன்), 16 & *ஹகீம் (கணவர்), 40**
**தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் - கெப்பிடிபொல நன்னடத்தை நிலையம் மற்றும் 4 ஆம் மாடி, சிஐடி அலுவலகம், கொழும்பு**
**குற்றச்சாட்டு - என்டிஜே நுவரெலியாவில் ஏற்பாடு செய்த பிரசங்கத்தில் கலந்துகொண்டமை மற்றும் 2018 இல் மாவனெல்லயில் புத்தர் சிலை உடைப்பில் சம்பந்தப்பட்டமை.**
**தொழில் - மாணவன் மற்றும் மௌலவி**
**திருமண அந்தஸ்து** – NA
**தங்கியிருப்போர் - இரண்டு பிள்ளைகள் (மகன், வயது 12 மற்றும் மகள், வயது** 3.8 **மாதங்கள்**)
**ஐசிஆர்சி - Rs. 2920 x 45 நாட்கள் (கணவர்) & Rs. 4500 x 45 நாட்கள் (மகன்)** - **விஜயங்களுக்கான பயணக் கொடுப்பனவு**

*கட்டாரிலுள்ள சட்ட அலுவலகம் ஒன்றில் ஹகீம் 10 வருடங்களாகப் பணியாற்றினார். 2017 இல் இலங்கைக்குத் திரும்பினார். அதன் பின்னர் அவர் தனது மனைவி பிள்ளைகளுடன் கெகுணகொல்லயில் வசித்துவந்தார். இவர் மௌலவியாக இருந்த காரணத்தினால் பள்ளிவாயல்களில் பிரசங்கம் நடத்திவந்தார். இவர் சஹ்ரானை எதிர்த்துவந்தார் என இவரின் மனைவி கூறினார். 2018 டிசம்பரில் பிரசங்கத்திற்காக இவர் தனது மகனுடன் நுவரெலியாவுக்குச் சென்றார். நுவரெலியா பார்ப்பதற்காகவே முஜீப் சென்றாரே தவிர அவசியம் பிரசங்கம் கேட்பதற்கல்ல. இவர்கள் திரும்பி வந்ததும் இவரின் மனைவியின் தந்தைக்கும் இவருக்கும் இடையில் ஒரு காணிப் பிரச்சினை காரணமாக உறவில் விரிசல் ஏற்பட்டது. இதனால் இவர் தனது வீட்டில் இருந்து வெளியேறி தனது ஊரான காத்தான்குடிக்கு 2019 ஜனவரியில் வந்தார். அதன் பின்னர் தனது மனைவியின் தொலைபேசி அழைப்புக்களுக்கு இவர் பதிலளிக்கவில்லை.

2019 ஏப்ரில் 24 ஆம் திகதி கட்டுபொத்த பொலிஸ் நிலையத்தில் இருந்து சில அதிகாரிகள் ஹுஸ்னாவின் வீட்டுக்கு வந்து அவரின் கணவர் காத்தான்குடிக்குச் செல்லும் வழியில் தம்புள்ளயில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட செய்தியினைக் கூறினர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாகக் குறிப்பிட்டனர். ஹுஸ்னாவினை வாக்குமூலம் அளிக்க பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அவர்கள் அழைத்தனர். அவரின் கணவர் எப்போது வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தார் எனவும் அவர் ஏனைய நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கின்றாரா என்றும் அவர்கள் மேல் மாடியில் வாடகைக்குக் கொடுத்த வீட்டில் சந்தேகத்துக்குரியவர்கள் தங்கியிருந்தார்களா என்றும் அவர்கள் கேட்டனர்.

கணவர் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்களின் பின்னர் தனது கணவனைப் பார்ப்பதற்காக ஹுஸ்னா அவரின் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கொழும்பிலுள்ள 4 ஆம் மாடியிலுள்ள சிஐடி அலுவலகத்திற்குச் சென்றார். அங்கே சென்ற அவர் தனது கணவனிடம் அவர் ஏன் கைதுசெய்யப்பட்டார் என்றும் அவர் என்ன செய்தார் என்றும் கேட்டார். தான் சம்பந்தப்படவில்லை என அவர் கூறினார். ஏன் தனது தொலைபேசி அழைப்புக்களுக்குப் பதிலளிக்கவில்லை என்றும் ஏன் தங்களைப் பார்க்க வரவில்லை என்றும் அவர் கேட்டார். ஹுஸ்னாவின் தந்தையுடன் வாழ முடியாது என்றும் அவர் இருக்கும் இடத்திற்கு அருகில் வாழ முடியவில்லை என்றும் கூறினார். அவர் தனது கணவனுடன் ஐந்து நிமிடங்கள் மட்டுமே பேசக்கூடியதாக இருந்தது.

2019 ஆகஸ்ட் 16 ஆம் திகதி கட்டுபொத்த பொலிசார் மீண்டும் ஒரு தடவை ஹுஸ்னாவின் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் விசாரணைக்காக முஜீபை அவர்களுடன் அம்பாறையிலுள்ள சிடிபி அலுவலகத்திற்கு வருமாறு கூறினர். *முஜீபுடன் காத்தான்குடியைச் சேர்ந்த அவரின் தந்தையின் உறவினர்

ஒருவரும் சென்றிருந்தார். முதலில் அவர்கள் அம்பாறையிலுள்ள ஒரு காலியான வீட்டிற்கு அவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். அங்கே வைத்து அவரிடம் அவர்கள் அவரை விடுவிப்பதாயின் அவர் 4 மாதங்கள் என்டிஜே பயிற்சி பெற்றவர் எனக் கூறுமாறு கூறினர். பயமுற்றிருந்த காரணத்தினால் அவர்கள் கூறியதை அவர் அப்படியே கூறினார். தான் சாதாரண தர மாணவனாக இருக்கின்ற காரணத்தினால் தனது எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத் தன்னைப் புகைப்படமோ வீடியோவோ எடுக்கவேண்டாமென்று அவர் பொலிசாரைக் கெஞ்சிக் கேட்டார். இவர் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் அடுத்த நாள் அவரின் படம் ஊடகங்களில் வெளிவந்தது.

அவர்கள் முஜீபை விசாரணைக்கு அழைத்துச் சென்ற பின்னர் அவர் திரும்பி வரும் வரை ஹுஸ்னா பாதை ஓரம் காத்திருந்தார். பின்னர் அவருக்குத் தொலைபேசி அழைப்பினை எடுத்தார். ஆனால் அது செயற்படவில்லை. மாலை 4 மணி வரை காத்திருந்த அவர் மகனைப் பற்றி அறிவதற்காக அம்பாறைக்குச் சென்றார். அவர் தனது மகனைக் கண்டபோது மகன் அழத் தொடங்கினார். அவரை ஏன் அங்கே கொண்டுவந்தார்கள் எனக் கேட்டபோது அதற்கு அவர் நுவரெலிய பிரச்சாரத்தினால் எனக் கூறினார். தனது வாக்குமூலத்தின் மூலம் தனது தந்தைக்குப் பிரச்சினை ஏற்படுத்த அவர்கள் முயற்சிப்பதாகத் தான் நினைப்பதாக முஜீப் கூறினார். 2018 இல் மாவனெல்லயில் புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தில் சம்பந்தப்பட்டதே ஹகீம் மீதான குற்றச்சாட்டாகும். எவ்வாறாயினும் அச்சந்தர்ப்பத்தில் அவர் மக்காவில் இருந்த காரணத்தினால் அது ஒரு பொய்க்குற்றச்சாட்டு என ஹுஸ்னா கூறினார்.

"எனது மகன் மிகுந்த பிரயாசை உள்ள மாணவன். அவன் அழைத்துச் செல்லப்பட்டபோது சாதாரன தரப் பரீட்சைக்காகக் கடந்த வருடம் படித்துக்கோண்டிருந்தான். ஹெப்பிடிபொல நன்னடத்தை நிலையத்தில் அவர் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது அவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைத்தது. ஆனால் அவர்கள் அவரைப் பரீட்சை எழுத அனுமதிக்கவில்லை. அவரின் பாடசாலை அதிபரினால் அவர் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளித்தமையினை நிரூபிப்பதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் என்னிடம் உண்டு. எனவே அவர் 4 மாதங்கள் பயிற்சிக்குச் சென்றிருக்க வாய்ப்பே இல்லை," என ஹுஸ்னா கூறினார்.

"எனது மகனைப் பார்க்க எனக்கு அனுமதி வழங்கப்படுவதில்ல. சிறைக் கைதிகளைப் பார்ப்பதற்குக் கூட அனுமதி வழங்கப்படுகின்றது. அவர்கள் ஏன் எனது மகனைப் பார்க்க என்னை அனுமதிக்கிறார்களில்லை என்பது எனக்குத் தெரியாது. நன்னடத்தை நிலையத்தில் எனது மகனை ஒரு தடவை 15 நிமிடங்கள் பாரக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆனால் அதன் பின்னர் அவரை நான் பார்ப்பதற்கு நன்னடத்தை அதிகாரி அனுமதி வழங்குவதை

நீதிபதி மறுத்து விட்டார். அந்த அதிகாரி விஜயத்திற்கான அனுமதி அங்கீகரிக்கப்படாமல் ஏன் தாயினைப் பார்க்க அனுமதித்தார் என நீதிபதி விசாரித்தார். அவரை வழக்கிற்காக 14 நாட்களுக்கொரு தடவை அம்பாறைக்குக் கூட்டிவரும் போது மட்டுமே என்னால் அவரை ஒரு பார்வை பார்க்க முடிகின்றது" என அவர் கூறினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் அவர் முறைப்பாடு செய்துள்ளார். கிராமசேவகரிடம் இருந்து கடிதத்தினைப் பெற்று மகனைப் பார்க்கச் செல்லுமாறு அவர்கள் அறிவுறுத்தினர். இருப்பினும் நீதிபதியின் உத்தரவின்றி அவரை அனுமதிக்க முடியாது என உள்ளூர் நன்னடத்தை அதிகாரி கூறிவிட்டார்.

"ஒரு தடவை மகன் என்னைப் பார்த்தபோது தனக்குச் சாப்பாடு வேண்டும் என என்னிடம் சைகை செய்து காட்டினார். எனது இதயம் நொறுங்கிவிட்டது. ஏனெனில் எனது மகன் எப்போதும் வீட்டில் நன்கு சாப்பிட்டு வளர்ந்தவன். தனது சகோதர சகோதரிகளுடனும் உறவினர்களுடனும் சிரித்து விளையாடி வாழ்ந்து வந்தவன். அவன் மிகவும் மகிழ்ச்சியான பையன். இப்போது அவன் மெலிந்து களைத்துப் போயிருக்கிறான். அவன் தனது உற்சாகத்தினை இழந்துவிட்டான். இந்த வருடம் கடைசியாக பெப்ரவரி 11 இல் நான் அவனைப் பார்த்தபோது என்னால் சில ஆடைகளையும் பிஸ்கட்டுக்களையும் கொடுக்க முடிந்தது. கூட்டிற்கு வெளியில் இருந்து 5 நிமிடங்கள் பேசக் கிடைத்தது. இவ்வாறு தன்னால் இருக்க முடியாது என்பதால் தன்னை எப்படியாவது வெளியில் எடுக்குமாறு மகன் என்னிடம் கூறினான்" என ஹுஸ்னா மனம் வருந்தினார்.

கடைசியாக நடந்த விசாரணையின் போது தாங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து முஜீபின் விடுதலை தொடர்பான அறிவுறுத்தலுக்காகக் காத்திருப்பதாக நீதிபதி குறிப்பிட்டார்.

வருமானத்தினைப் பொறுத்த அளவில் ஹுஸ்னாவின் கணவனின் சகோதர சகோதரிகள் ஹுஸ்னா 14 நாட்களுக்கொரு தடவை அம்பாறைக்கு வரும்போது சிறிது பணத்தினை வழங்குகின்றனர். மேலும் தாக்குதல் நடத்தப்பட்டதில் இருந்து வீட்டில் இருந்து சில தையல் வேலைகளை ஹுஸ்னா செய்துவருகின்றார். இதனால் அவர் மாதாந்தம் 7000 ரூபா வரை உழைக்கின்றார். இப்போது இவரின் வீட்டில் வாடகைக்கு யாரும் இல்லை. இதனால் வருமானம் வருவதும் நின்றுவிட்டது. சில அயலவர்கள் தங்களால் இயன்றபோது அரிசி மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கி வருகின்றனர். "உணவிருந்தால் சாப்பிடுகின்றோம். இல்லையென்றால் நாங்கள் சாப்பிடுவதில்லை," எனக் கூறினார். பிள்ளைகளின் பாடசாலைச் செலவிற்காகவும் வீட்டுத் தேவைகளுக்காகவும் இவருக்கு மாதம் 25000 ரூபா தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார். தற்போது மகனை டியூசனுக்கு அனுப்ப

இவரிடம் பணம் இல்லை. ஏற்றுமதி செய்வதற்காக ஸ்டொக்கினட் மலர் வளர்க்கும் குழுவில் இவர் உறுப்பினரா இருந்தார். ஆனால் தாக்குதல்களின் பின்னர் அவர் நிறுத்திவிட்டார். இப்போது அனைவரும் தம்மை வித்தியாசமாகப் பார்ப்பதால் இதனை மீண்டும் தொடங்க முடியும் என்ற நம்பிக்கை தனக்கில்லை எனக் குறிப்பிட்டார்.

"எனது மகன் பச்சிளம் குழந்தையாக இருந்தபோது அவருக்குச் சின்னமுத்து ஏற்பட்டது. அவர் உயிர் பிழைத்ததே பெரிய விடயம். தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் இருந்த வாட்டில் உயிர் பிழைத்தது இவர் மட்டுமே. அதன் பின்னர் கவனமாக இருக்குமாறு வைத்தியர் எமக்குக் கூறினார். அவருக்கு 7 வயதாக இருக்கும்போது வலிப்பு ஏற்படத் தொடங்கியது. கடந்த டிசம்பரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. காய்ச்சலினால் அவரின் இதயம் பாதிக்கப்பட்டதால் ஐசிஆர்சி மருத்துவம் செய்யவேண்டி ஏற்பட்டது. தாய் என்கின்ற ரீதியில் என் மகனைக் கவனிக்க முடியாததால் நான் மிகவும் கவலையடைந்திருக்கின்றேன்" எனச் சோகமாகக் கூறினார்.

"தயவுசெய்து எனது மகனை எப்படியாவது வெளியில் எடுங்கள். என்னால் அவனைப் பார்க்கக்கூடச் செல்ல முடியாதுள்ளது. எனக்கு ஏன் என்று கூடத் தெரியாது. தொடர்ந்து அம்பாறைக்குப் பயணம் செய்வது எனக்குக் கடினமானதாக இருக்கின்றது. 14 நாட்களுக்கொரு தடவை நீதிமன்றத்திற்கு வருவதற்காக அவரும் இரவெல்லாம் பயணம் செய்து மொனராகலயில் தங்கி வரவேண்டியிருக்கின்றது. அவர் சாதாரண தரப் பரீட்சையினை எழுதி பாடசாலைக்குச் செல்வதைத் தொடரவே விரும்புகின்றார். செய்தியில் அவரின் முகம் வெளியிடப்பட்டதைப் பற்றி அவர் இப்போதும் மிகவும் கவலையடைந்தவராகவே இருக்கின்றார். அவர் மிகவும் கவலையடைந்தவராகவும் எப்போதும் எதையாவது சிந்தித்தவராகவுமே இருக்கின்றார். அவர் நோன்புக்கு வீட்டுக்கு வரவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்," என ஹுஸ்னா கூறினார்.

**குடும்பம் - எம் நசீபா (29)**
**கைது செய்யப்பட்டவர் - என் ஜகரிய்யா (40), ஹிஜ்ராபுரம், ஹெபிதிகொல்லாவ**
**தற்போது - பிணையில் விடுதலையாகியுள்ளார் (2019 நவம்பர் 19 இல் இருந்து)**
**குற்றச்சாட்டு - தனது வங்கிக் கணக்கிற்கு சஹ்ரானிடமிருந்து நிதியினைப் பெற்றமை**
**தொழில் - இல்லத்தரசி மற்றும் தையல் தொழிலாளி**
**தங்கியிருப்போர் - மூன்று பிள்ளைகள் (மகள்கள் வயது 10 & 7 & மகன் வயது 3)**

2019 மே 25 ஆம் திகதி, ஹொரவப்பொத்தான பொலிசார் ஜகரிய்யாவினை வீட்டில் இருந்து கூட்டிச் சென்றனர். அவரின் மாமா பொலிஸ் நிலையத்திற்கு அவருடன் சென்றார். திரும்பி வந்த அவர் ஜகரியா அங்கே 3 நாட்கள் இருக்கவேண்டும் எனப் பொலிசார் கூறியதாகச் சொன்னார். பின்னர் நசீபா தனது பிள்ளைகளுடன் அவரைப் பார்க்கப் பொலிசுக்குச் சென்றார். அதன் பின்னர் ஜகரியாவை மேலும் 7 நாட்கள் வைத்திருக்க வேண்டும் என கெபிதிகொல்லாவ நீதவான் குறிப்பிட்டிருக்கின்றார். இதன் பின்னர் தடுத்துவைப்பு 14 நாட்களுக்கொரு தடவை நீட்டிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு நீட்டித்து 7 மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டார்.

“பொலிசார் எங்களின் வீட்டுக்கு வந்தபோது நான் சஹ்ரானுக்குச் சமைத்துக் கொடுத்ததாக அவர்கள் என் மீது குற்றம் சுமத்தினர். ‘*எங்களுக்குத் தெரியும் நீங்கள் தவ்ஹீத் ஜமாஅத் என்று. நீங்கள் சஹ்ரானுக்காக வேலை செய்தவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்*’ என அவர்கள் என்னிடம் கூறினர். அவரை நான் என் வாழ்விலே பார்த்ததே இல்லை என நான் கூறினேன். அவர்கள் நம்பவில்லை. எனது வீட்டைச் சோதனையிடவேண்டும் என்று வற்புறுத்தினர். வீட்டிற்கு விசேட அதிரடிப் படையினரும் வந்து வீட்டை நான்கு தடவைகள் சோதித்தனர். ஆனால் நிச்சயமாக எதையும் கண்டெடுக்கவில்லை” என அவர் கூறினார்.

“அனைத்து முஸ்லிம்களும் தவ்ஹீதில் (ஏக இறைவனை நம்புதல்) நம்பிக்கை கொண்டுள்ளனர். இதன் அர்த்தம் இறைவன் ஒருவனே என்பதாகும். இது பயங்கரவாதத்துடன் தொடர்புடையதல்ல. தங்களின் நிறுவனத்தின் பெயரின் பகுதியாக தவ்ஹீதை என்டிஜேயினர் பயன்படுத்தியிருக்கின்றனர். நீங்கள் தவ்ஹீத் முஸ்லிம்களைக் கைதுசெய்ய வேண்டுமாயின் எங்கள் அனைவரையும் கைதுசெய்ய வேண்டும்” எனச் சிரித்தவாறு ஜகரிய்யா குறிப்பிட்டார்.

“என்னுடனும் எனது குழந்தைகளுடனும் எனது தந்தை 3 மாதங்கள் தங்கியிருந்தார். அதன் பின் அவர் தன் வீட்டுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. நாங்கள் பின்னர் தனியே இருந்தோம். நான் ஒவ்வொரு நாளும் எனது கணவனுக்கு உணவு எடுத்துக்கொண்டு அநுராதபுரம் சிறைக்குச் செல்வேன். ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை தினம் என்பதால் செல்வதில்லை. எனது துணைக்காக எனது இளைய பிள்ளையினை மட்டும் என்னுடன் கூட்டிச் செல்வேன். ஏனெனில் 3 பேரையும் சகல இடங்களுக்கும் கூட்டிச் செல்வது செலவுமிக்கதாகும். சிறைச்சாலைக்குச் செல்லப் பொதுப் போக்குவரத்தில் செல்வதாயின் 3 பஸ்களில் செல்லவேண்டும். எரிபொருள் செலவினை வழங்கி அயலவருடன் மோட்டார் சைக்கிளில் செல்வது மலிவானதும் இலகுவானதுமாகும். எமது வீட்டில் இருந்து சிறைச்சாலை 55 கிலாமீற்றர் தூரத்திலேயே உள்ளது. இந்த அனைத்துச் சிரமங்களின் பின்னர், கணவரை கண்ணாடி வழியே அல்லது சிறு வலைத் திரை வழியேதான் எங்களுக்குப்

பார்க்க முடியும். அதுவும் 5 நிமிடங்கள்தான் பாரக்க முடியும். கண்ணாடித் திரை இருந்தால் அவருடன் பேச முடியாது. சிறு வலைத் திரை இருந்தால் பார்க்க முடியாது. எனது பிள்ளையைக் கூட அவரால் தூக்க முடியாது. பிள்ளைகள் தந்தையைக் கண்டதும் அழ ஆரம்பிப்பார்கள். அவருடன் தங்கவேண்டும் எனக் கூறுவார்கள். அது மிகவும் மன விரக்தி ஏற்படுத்தும் நாட்கள்" என அவர் கூறினார்.

ஹெப்பித்திக்கொல்லாவ வைத்தியசாலைக்குச் செல்வதற்கு (செல்வதற்கு மட்டும்) 500 ரூபா தேவை. எனது தந்தையும் அயலவர்களும் இயலுமான அளவு உதவி செய்தனர். நான் காலையில் நேரத்துடனேயே எழுந்து கணவருக்காகச் சமைத்து எடுத்துச் செல்வேன். திரும்பி வந்து அடுத்த நாளுக்காகச் சமைப்பேன். மேலும் நான் பிள்ளைகளையும் பார்க்கவேண்டியிருந்தது. என்னையும் நான் கவனிக்க வேண்டியிருந்தது. பிள்ளைகள் காலையில் எழுந்ததும் தந்தை எங்கே என்று கேட்பார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து எதைச் சொல்வது என்பது எனக்குத் தெரியாது" என அவர் மேலும் கூறினார்.

"எனது பிள்ளைகளின் நண்பர்கள் ஏன் தந்தை சிறையில் இருக்கின்றார் என அவர்களிடம் கேட்பார்கள். அவர்கள் வீட்டுக்கு வந்து ஐஎஸ்எஸ் என்றால் என்ன என்று கேட்பார்கள். எனது மூத்த மகள் எப்போதும் வகுப்பில் முதலாவதாக வருவாள். ஆனால் அவளின் தந்தை கைது செய்யப்பட்ட பின்னர் அவள் மிகவும் குழப்பமடைந்துவிட்டாள். அவளால் ஒழுங்காகப் படிக்க முடியவில்லை. அடுத்த பிள்ளை பாடசாலைக்குச் செல்ல முடியாது என்று கூறிவிட்டது. ஏனெனில் அவளின் ஆசிரியை அவளின் அப்பா சிறையில் இருக்கின்றார் எனக் கூறி அவளை அடித்திருக்கின்றார். எனவே அவள் இப்போது எனது தந்தையின் ஊரிலுள்ள பாடசாலைக்குச் செல்கின்றாள். எனது மற்றப் பிள்ளை தான் வளர்ந்து பெரியவனானதும் பொலிசாக வருவேன் என்று கூறினான். அப்போதுதான் ஐஎஸ்எஸ்சினைக் கைதுசெய்ய முடியும் என்று கூறினான். ஏனெனில் எவ்விதக் காரணமுமின்றி அவர்களால் தான் தனது தந்தை கைதுசெய்யப்பட்டாராம். நான் 7 மாதங்களில் 2 கிலோ இளைத்துவிட்டேன். நான் சமைப்பேன். ஆனால் சாப்பிட மனம் வராது" என அவர் கவலையுடன் நினைவு கூறினார்.

இப்போது ஜகரிய்யா வீட்டில் இருந்தாலும் கடந்த வருட அறுவடை அவருக்குக் கிடைக்கவில்லை. இப்போது அடுத்த போகத்திற்காகக் காத்திருக்கின்றார். அவருக்கு உடல்நலமும் சரியில்லை. அவரால் அதிகம் வேலை செய்ய முடியாது. இது மேலதிகப் பிரச்சினையாக இருக்கின்றது.

மேலதிக வருமானம் பெற தையல் இயந்திரத்திற்கான தேவையினைப் பற்றி அவர் குறிப்பிட்டார்.

**குடும்பம் - ஜே ஹைருல்ஹுதா (29)**
**கைது செய்யப்பட்டவர் - L.T. ஜெஸ்மின் (33), ஹிஜ்ராபுரம், கெப்பிதிகொல்லாவ**
**தற்போது - பிணையில் விடுதலையாகியுள்ளார் (2019 நவம்பர் 19 இல் இருந்து)**
**குற்றச்சாட்டு - சஹ்ரானிடமிருந்து தனது வங்கிக் கணக்கிற்கு நிதியினைப் பெற்றுக்கொண்டமை.**
**தொழில் - ஆசிரியர்**
**தங்கியிருப்போர் - இரண்டு பிள்ளைகள் - இரண்டு பிள்ளைகள் (மகன் 5 மற்றும் மகள் 2)**

"2019 மே 25 ஆம் திகதி எமது கதவில் பலமாகத் தட்டிச் சத்தம் கேட்டது. பிள்ளைகள் தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டார்கள். அவர்கள் எனது கணவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றார்கள். அவரை 3 நாட்களில் அனுப்பிவிடுவோம் என ஆரம்பத்தில் கூறினர். பின்னர் 7 நாட்கள் எனக் கூறினர். பின்னர் காலப் பகுதியினைக் கூட்டிக்கொண்டே சென்றனர். எனக்கு இருப்பதோ தந்தை மட்டுமே. எனவே நான் பிள்ளைகளை அழைத்துக் கோண்டு அவருடன் வாழ ஹொரவப்பொத்தானைக்குச் சென்றேன். அங்கிருந்து அநுராதபுரச் சிறைச்சாலைக்குச் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும் (ஒரு வழிப்பாதை). இதனால் போவதும் வருவதும் எனக்குக் கடினமாக இருந்தது. நான் ஒவ்வொரு நாளும் கணவருக்குச் சாப்பாடு எடுத்துக் கொண்டு சிறைக்குச் செல்வேன். நான் வீட்டிற்கு வரும்போது 8 மணியாகிவிடும். அப்போது பிள்ளைகள் தூங்கியிருப்பார்கள். பிள்ளைகளால் படசாலைக்கும் ஒழுங்காகச் செல்ல முடியவில்லை. பாடசாலைக் கலைவிழாவுக்குத் தங்களுடன் தந்தை வரவேண்டுமென்று கேட்டனர். அதற்கு பதிலளித்துச் சமாளிப்பது எனக்கு மிகக் கடினமானதாக இருந்தது. அந்த நாட்களில் நான் ஒரு பைத்தியகாரி போன்றிருந்தேன். சமைக்கையில் உப்பு அல்லது வெங்காயத்தினைச் சமையலில் சேர்க்க மறந்துவிடுவேன்" என அவர் கூறினார்.

"14 நாட்களுக்கொரு தடவை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும்போது நான் சட்டத்தரணிக்கு 10000 ரூபா கொடுக்கவேண்டும். இது மிகவும் கடினமானது. ஏனெனில் எல்லாச் செலவுகளுக்கும் எனக்கு இருப்பது எனது வருமானம் மட்டுமே. நான் மாதம் 35000 ரூபா உழைப்பேன். அதில் நான் சட்டத்தரணிக்கு 20000 ரூபா கொடுக்கவேண்டும். 10000 ரூபா கடன் மீள்கொடுப்பனவாகப் பாடசாலைச் சங்கத்திற்குக் கொடுக்கவேண்டும். 2000 ரூபா அங்கத்துவக் காசு கொடுக்கவேண்டும். நான் யாரிடம் இருந்தெல்லாம் கடன் வாங்கினேனோ அவர்கள் எல்லாம் இப்போது கடனைக் கேட்கின்றனர். இதனால் நான் ஒவ்வொரு மாதமும் கடனினைச்

செலுத்திக்கொண்டிருக்கின்றேன். நான் எனது கணவரைப் பார்க்கச் செல்லும்போது எனக்கு உணவும் 2000 ரூபாவும் தந்து எனது குடும்பத்தினர் உதவுகின்றனர். நான் அதிகம் விடுப்பு எடுக்கவேண்டியிருந்தது. இந்த வருடம் நான் இனிமேலும் எடுப்பதற்கு விடுப்புக்கள் பாக்கியாக இல்லை" எனக் கூறினார்.

அவரின் கணவர் இப்போது வீட்டில் இருக்கின்றார் என்றாலும் வழக்கு முடியும் வரை அவரால் வேலைக்குச் செல்ல முடியாது. மேலும் விபத்தின் பின்னர் இதய சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளதால் அவரால் பாரமான வேலை எதுவும் செய்ய முடியாது. "எனது கணவரால் கிராமத்தில் வேலை பார்க்க முடியாது. ஏனெனில் எல்லோரும் எங்களுக்கு எதிராக இருக்கின்றனர். எங்களுக்கு அறிமுகமான எங்களின் முன் வீட்டு அயலவர்கள் கூட எங்களுக்கு எதிராக இருக்கின்றனர். விசேட அதிரடிப் படையினர் எங்களின் வீட்டைச் சோதனை செய்தபோது முன் வீட்டார் ஏனைய அயலவர்களிடம் தாங்கள் எங்களுக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளதாகக் கூறியுள்ளனர்" எனக் கூறினார்.

"சுமார் 10 வருடங்களின் முன்னர் ஒரு மோசமான விபத்தில் எனது கணவர் படுகாயமடைந்தார். அவருக்கு கொமோட் தேவை. ஆனால் எங்களால் அதனை வாங்க முடியாதுள்ளது. எங்கள் வீட்டில் மின்சாரமும் இல்லை. ஏனெனில் அதற்கான வயரிங் செய்வதற்கு எங்களிடம் வசதியில்லை. அரசாங்கம் எங்களுக்கு அதனைச் செய்து தராது. எங்கள் பயிர்கள் அனைத்தும் கடந்த வருடம் அழிந்துவிட்டன. எமது வீட்டில் அரைவாசிக்கே எங்களால் கூரை போட முடிந்தது. அரைவாசி கூரைத் தகடுகளும் அரைவாசி ஓடும். மழை பெய்கையில் வீட்டில் அதிகமான இடங்களில் நீர் நிறைந்து விடுகின்றது. எங்கள் வீட்டுக்கு ஒழுங்கான கூரை இல்லை. ஆனால் நாங்கள் எங்கள் வீட்டுக் கூரைப் பைப்பில் 100 கோடி ரூபா ஒளித்து வைத்திருக்கின்றோம் என மக்கள் கூறுகின்றனர். என்ன ஒரு நகைச்சுவை? தாக்குதலின் பின்னரே எங்களுக்கு சஹ்ரான் பற்றித் தெரியவந்தது," எனக் கூறினார்.

"எனது அயலவர்கள் என்னைக் கேலி செய்து எனது கணவர் ஐஎஸ்ஐஎஸ் எனக் கூறிவந்தனர். ஏழு மாதங்களாக நான் எங்கேயும் செல்லவில்லை. ஏனெனில் எல்லோரும் என்னைப் பார்த்து *'ஐஎஸ்ஐஎஸ் ஆட்கள் வருகிறார்கள், இவர்களெல்லாம் பயங்கரவாதிகள்' எனக் கூறுவதை வழமையாகக் கொண்டிருந்தனர்.* நான் வேலையும் வீடுமாக இருந்து விட்டேன். எனக்குக் கடன் தரப் பலரும் மறுத்துவிட்டனர். நாங்கள் ஐஎஸ்ஐஎஸ் எனக் கூறியே மறுத்தனர். இது மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியது" எனக் கூறினார்.

இவரது தந்தை தனியாக இருக்கின்ற காரணத்தினால் அவருக்கு ஏதாவது நடந்துவிட்டால், அவரையும் இவர்தான் பார்க்கவேண்டும். ஏனெனில் இவரின் ஏனைய உடன்பிறப்புக்கள் அதிக உதவி செய்வதில்லை. இவரின் கணவர் கைதுசெய்யப்பட்டபோது கூட தந்தையின் உதவி மாத்திரமே இருந்தது. அது

மிகக் கடினமானதாக இருந்தது. “வழக்கு விசாரணை நாட்களில் நான் பிள்ளைகளை நீதிமன்றத்திற்குக் கூட்டிச் செல்லும்போது சிறைச்சாலை பஸ்சைக் கண்டதும் பிள்ளைகள் சத்தமாக “அப்பாவின் பஸ்” வந்து விட்டது எனக் கூறுவார்கள். தந்தையுடன் பேச அனுமதிக்குமாறு அவர்கள் ஒரு தடவை பொலிசாரைக் கேட்டனர். ஆனால் பொலிசார் அவர்களை ஐஎஸ்ஐஎஸ் என்று ஏசித் தள்ளவிட்டனர். இப்போது எங்களுக்குப் பொலிசுடனும் நீதிமன்றத்துடனும் தொடர்புடைய ஒவ்வொருவரைப் பற்றியும் ஒவ்வொரு விடயத்தினைப் பற்றியும் தெரியும். எங்களுக்கு பிடிஏ மற்றும் ஐசிசிபிஆர் பற்றியும் தெரியும் இதற்கு முன்னர் எங்களுக்கு இதெல்லாம் தெரியாது” எனக் கூறினார்.

“நாங்கள் ஊடகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க விரும்புகின்றோம். தங்களின் பொய்களினால் எங்கள் வாழ்வை அழித்தவர்கள் அவர்கள்தான். அவர்களின் பொறுப்பற்ற செய்திகளுக்காக அவர்கள் வகைப் பொறுப்புக் கூற வைக்கப்படவேண்டும். எனது கணவரைப் பற்றிய பொய்களை அவர்கள் எவ்வாறு லங்காதீப முதல் பக்கத்தில் வெளியிட்டனரோ அவ்வாறே அப்பொய்களை வாபஸ் பெற்று அதற்கான மன்னிப்பினையும் முதல் பக்கத்தில் வெளியிடவேண்டும்” என அவர் கோபத்துடன் கூறினார்.

**குடும்பம் - ஏ எஸ் எஸ் அயேசா (36)**
**கைதுசெய்யப்பட்டவர் - எம் பி ஹகீம் (44), ஹொரவப்பொத்தான**
**தற்போது - பிணையில் விடுதலையாகியுள்ளார் (2019 நவம்பர் 19 இல் இருந்து)**
**குற்றச்சாட்டு - சஹ்ரானிடமிருந்து தனது கணக்கிற்கு நிதியினைப் பெற்றார்.**
**தொழில் - பாடசாலை ஆசிரியர்**
**தங்கியிருப்போர் - ஐந்து பிள்ளைகள் (மகன்கள் 9, 4 ½ & 3 & மகள்கள் வயது 11 & 6)**

“பொலிசினால் அழைத்துச் செல்லப்பட்ட ஐவரில் எனது கணவரே முதலில் அழைத்துச் செல்லப்பட்டார். 2019 மே மாதம் 25 ஆம் திகதி அதிகாலை 5.05.ற்கு பொலிசார் துவக்குகளுடன் வந்தனர். எமது பிள்ளைகள் ஏன் அழுகின்றனர் என அவர்கள் கேட்டனர். எனது கணவரை வாக்குமூலம் பெற்ற பின்னர் திருப்பி அனுப்புவதாகக் குறிப்பிட்டனர். விசேட அதிரடிப் படையினர் எமது வீட்டைச் சோதனை செய்து எமது அடையாள அட்டையினையும் வங்கிக் கணக்குப் புத்தகத்தினையும் எடுத்துச் சென்றனர். பின்னர் எம்மிடம் அனைத்தையும் திருப்பி வழங்குமாறு அவர்களிடம் TID கூறியது. எனது கணவருக்குக் கைவிலங்கிட்டு மாவட்டச் செயலக அலுவலகத்தில் உள்ள அவரின் வேலைத்தளத்தினைப் பரிசோதிப்பதற்காக அவர்கள் அழைத்துச் சென்று அவரின் சக ஊழியர்களின் முன்னிலையில் அவமானப்படுத்தினர். அதன்

பின்னர் எமது வீட்டைச் சோதனையிடுவதற்காகக் கைவிலங்குகளுடன் எமது வீட்டிற்கு எமது பிள்ளைகளின் முன் அவரைக் கொண்டுவந்தனர். நான் என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்காக உடனடியாக நசீபாவுக்கு அழைப்பினை எடுத்தேன். அப்போதுதான் ஜகரிய்யா உள்ளிட்ட மேலும் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என எனக்குத் தெரிய வந்தது" என அவர் கூறினார்"

"ஹொரவப்பொத்தானயில் உள்ள தூரப் பாடசாலையில் நான் கற்பிக்கின்றேன். சமைத்துப் பாடசாலைக்குச் செல்லும் நான் உணவு எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று கணவரைப் பார்த்துவிட்டு அதன் பின்னர் வீடு திரும்புவேன். நான் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குப் பிந்தியே செல்வேன். ஏனெனில் வேலைக்குச் செல்ல முன்னர் கணவனுக்காகச் சமைக்கவும் வேண்டும் அத்துடன் வேறு பல வேலைகளையும் பார்க்கவேண்டும். எனது பிள்ளைகளின் நண்பர்கள் அவர்களைக் கேலி செய்து அவர்களின் தந்தை ஐஎஸ்ஐஎஸ்காரரா என்று கேட்பார்கள். அவர்கள் மிகவும் பயந்தவர்களாகவும் தங்களின் தந்தையினைப் பற்றி மிகவும் கவலைப்பட்டவர்களாகவும் இருப்பார்கள். எனது மூத்த மகள் மிகவும் கெட்டிக்காரி. ஆனால் தந்தையின் கைதின் பின்னர் அவள் குழம்பிவிட்டாள். வகுப்புக்களுக்குச் செல்வதையும் நிறுத்திவிட்டாள். கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையிலும் அவள் சித்தியடையவில்லை. அந்த நாட்களை நினைக்கையில் எனக்கு ஓவென்று அழவேண்டும் போலிருக்கின்றது" எனக் கூறினார்.

அயேசாவின் பிள்ளைகளின் எடையினை ஒவ்வொரு மாதமும் நிறுப்பதற்கு ஒரு மருத்துவ மாது அயேசாவின் வீட்டுக்கு வந்து சென்றார். ஹகீமின் கைதின் பின் அவரும் வருவதை நிறுத்திவிட்டார். கட்டாய விடுப்பினை வழங்கும் கடிதம் ஹகீமின் பிரதேச செயலக அலுவலகத்தினால் அவருக்கு வழங்கப்பட்டது. அலுவலகம் அவரைப் பணியில் இருந்து இடைநிறுத்தவில்லை. எனவே பிணையில் விடுதலையானதும் ஹகீமினால் மீண்டும் வேலைக்குச் செல்ல முடிந்தது. ஹகீமின் ஊழியர்கள் சிலர் அவரிடம் ஹகீமிடம் 100 கோடி ரூபா இருந்ததாகவும் ஹகீம் அவர்களிடம் அதைப் பற்றிச் சொல்லவில்லை எனவும் கூறியிருக்கின்றனர். அத்துடன் ஹகீமைத் தவிர்த்து வருகின்றனர். "இதனால் தன்னுடன் பேசுபவர்களுடன் மட்டுமே அவர் பேசுகின்றார். அவரால் வேறு என்னதான் செய்ய முடியும்"? என அயேசா கேட்கின்றார்.

"எனக்கு இப்போது இருக்கும் பெரிய பிரச்சினை அந்த நேரத்தில் எடுத்த அனைத்துக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதே. எனது சம்பளம் 40000. அதில் கடன்களுக்காக 20000 ரூபா வெட்டப்படுகின்றது. இதனால் வீட்டுச் செலவுகளுக்கும் பிள்ளைகளின் செலவுகளுக்கும் பெரிதாக எதுவும் மிஞ்சுவதில்லை. அடுத்த முக்கியமான விடயம் ஊடகம் எனது கணவர் களங்கமற்றவர் எனக் கூறவேண்டும். ஏனெனில் அவர்கள்தான் பொய்களைக் கூறி எங்கள் வாழ்வை அழித்தவர்கள்" என அவர் கூறினார்.

**தடுத்துவைக்கப்பட்டுள்ளவர் - என் ஜக்கரிய்யா** (40), **ஹிஜ்ராபுரம்**, **ஹெப்பித்திக்கொல்லாவ**
**தற்போது - பிணையில் விடுதலையாகியுள்ளார்**
**குற்றச்சாட்டு - சஹ்ரானிடமிருந்து தனது வங்கிக் கணக்கிற்கு நிதியினைப் பெற்றுக்கொண்டார்.**
**தொழில் - இஸ்லாமியக் கல்லூரியில் ஆசிரியர் மற்றும் விவசாயி**
**திருமண அந்தஸ்து - திருமணமானவர்**
**தங்கியிருப்போர் - மூன்று பிள்ளைகள் (மகள்கள் வயது 10 & 7** & **மகன் வயது 3)**

2019 மே 24 ஆம் திகதி ஜகரிய்யாவின் வீட்டிற்கு வந்த ஹொரவப்பொத்தான பொலிசார் விசாரணைக்கென்று அவரை அழைத்துச் சென்றனர். ஆனால் எவ்வித விசாரணையுமின்றி அவரை பிப 2 மணியில் இருந்து 8 மணி வரை பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்தனர். பின்னர் 8.30 மணியளவில் அவர் வீட்டிற்குத் திரும்பலாம் என்றும் தேவைப்பட்டால் மீண்டும் அழைப்பதாகவும் குறிப்பிட்டனர். அது நோன்பு காலம். அவரிற்கு அவர்கள் காலை நோன்பு பிடிப்பதற்கு எதுவும் கொடுக்கவில்லை. வெரும் நீரை அருந்திய அவர் அன்றிரவு வெகு நேரமாகியே வீடு திரும்பினார். அடுத்த நாள் அயலிலுள்ள கடைக்காரர்கள் அக்கிராமத்தில் இருந்து அன்றைய தினம் 5 பேர் கைதுசெய்யப்படப் போகின்றனர் எனப் பேசிக்கொண்டனர்.

அன்றைய தினம் (25) முப 5.30 மணியளவில் மீண்டும் வீட்டிற்கு வந்த ஹொரவப்பொத்தான பொலிஸ் ஜகரிய்யாவை அழைத்துச் சென்றனர். அதே தினம் எல் டி ஜஸ்மின், எம் பி ஹகீம், எஸ் ஏ இர்பான் மற்றும் எஸ் ஏ ஹலிபதுல்லாஹ் ஆகிய மேலும் நால்வரும் கைதுசெய்யப்பட்டனர். மூன்று நாட்களின் பின்னர் அவர்கள் மருத்துவ அதிகாரியின் முன் ஆஜர்படுத்தப்பட்டனர். ஹகீமின் குடும்பத்தின் முன் ஹகீமுக்குக் கைவிலங்கிட்ட ஹொரவப்பொத்தான பொலிசார் அப்படியே அவரை அவரின் பிரதேச செயலக அலுவலகத்தில் அவரின் சக ஊழியர்களின் முன் அழைத்துச் சென்ற பின்னரே பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். மீண்டும் அவரை வீட்டைச் சோதனையிடுவதற்காக அழைத்துச் சென்றனர்.

சஹ்ரான் இவர்களின் வங்கிக் கணக்கில் நூறு கோடி ரூபாவினை வைப்புச் செய்ததாகக் கூறி லங்காதீப பத்திரிகை வெளியிட்ட செய்தியினைக் காட்டி அதற்கு விளக்கமளிக்குமாறு பொலிசார் கேட்டனர். இவர்கள் அதனை மறுத்ததும் அதே கிராமத்தினைச் சேர்ந்த அபூபக்கர் மற்றும் நியாஸ் ஆகிய இருவருக்கும் எதிராகச் சாட்சியளித்தால் அவர்களை விடுதலை செய்வதாகப் பொலிசார் கூறினர். பொய் கூறி மற்றவர்களை மாட்டிவிடக் கூடாது என்பதற்காக இவர்கள் அதனை மறுத்துவிட்டனர். தாங்கள் சஹ்ரானை

ஒருபோதும் சந்திக்கவுமில்லை அல்லது அவனுடன் பேசியிருக்கவுமில்லை என்றும் தாக்குதல்களின் பின்னரே அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதாகவும் அவர்கள் திட்டவட்டமாகக் கூறினர். “பயங்கரவாதி என எம்மில் ஒருவரையாவது அர்த்தப்படுத்தக்கூடியவாறு நாங்கள் ஆற்றிய ஒரு பிரசங்கத்தினையாவது காட்டுமாறு நாங்கள் அதிகாரிகளைக் கேட்டோம். சவூதிப் பணத்தினைப் பயன்படுத்தி நாங்கள் எதனையும் கட்டவில்லை. நாங்கள் கட்டிய எல்லாமே உள்ளூரில் திரட்டிய நிதியினைக் கொண்டு கட்டியவை. எமக்கு இங்கே ஒரு பள்ளிவாயல் தான் இருக்கின்றது. பசீருக்கும் ஏனையோருக்கும் 3 இருக்கின்றது,” என அவர்கள் கூறினர்.

“100 கோடி ரூபாவினை ஒரு பக்கம் வையுங்கள். எங்கள் வீட்டு வேலையைப் பூர்த்திசெய்ய எங்களிடம் குறைந்தது 5 லட்சம் இருந்தால் அதுவே பெரிய விடயமாக இருந்திருக்கும். எங்களில் ஒருவருக்கு வங்கிக் கணக்குக் கூட இல்லை. மற்றொருவருக்கு ஒழுங்கான கழிப்பறையை நிர்மானிக்கவோ அல்லது கூரைக்குப் போட தகடு வாங்கவோ கூட பணம் இல்லை” என அவர்கள் சிரித்தவாறு கூறினர்.

கடைசியில் இந்த 5 பேரையும் அநுராதபுரச் சிறையில் தடுத்து வைத்தனர். 14 நாட்களின் பின்னர் நான்கு பேரை வாரியபொல சிறைச்சாலைக்கு மாற்றிவிட்டனர். ஆரம்பத்தில் ஐந்து பேருக்கும் வெவ்வேறு இலக்கங்களின் கீழேயே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அவர்கள் அபூபக்கர் மற்றும் நியாஸ் ஆகியோரைப் போல் அதே இலக்கத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். இதனால் இவர்களுக்கு எதிராகப் பொலிசாரிடம் போதிய சான்றுகள் இல்லாவிடினும் இவர்களை வெளியில் எடுப்பது கடினமானதாக இருந்தது. இவர்களுக்கு எதிராகச் சாட்சியங்கள் இல்லை என்றும் இவர்கள் மீதான தனிப்பட்ட கோபத்தினால் பசீரும் அவரது குழுவினரும் இவர்களைச் சிக்கவைக்க முயற்சி செய்கின்றனர் என்றும் கெப்பித்திக்கொல்லாவ பொலிசார் உறுதிப்படுத்தினர். அவர்கள் (பசீரும் அவர்களும்) ஏன் உங்கள் அனைவருடனும் மிகவும் கோபமாக இருக்கின்றனர் எனக் கேட்டிருக்கின்றனர். சஹ்ரான் பிரதேசத்திற்கு ஒருபோதும் விஜயம் செய்யவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டபோது நோன்பு காலமாக இருந்தபோதிலும் அவர்களுக்கு அதிகாலையில் சாப்பிட்டுவிட்டு நோன்பு பிடிப்பதற்காக எதுவும் வழங்கப்படவில்லை. பின்னர் அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை என்ற உண்மை தெரியவந்தபோது ஒவ்வொருவரும் இவர்கள் மீது இரக்கப்பட்டு இவர்களை நன்கு நடத்தினர்.

சமுதாயத்தில் தமக்கெதிரான சிலரின் தனிப்பட்ட வன்மத்தினாலேயே தங்களைச் சிக்கவைக்க முயற்சி செய்யப்பட்டதாக ஜக்கரிய்யா குறிப்பிட்டார். இதற்கான காரணம் அரசியல் கருத்து வேறுபாடுகளும் இஸ்லாம் பற்றிய

வியாக்கியானங்களும் சில குடும்பப் பிளவுகளும் என அவர் குறிப்பிட்டார். "எங்களைச் சிக்கவைத்துவிட்டார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும். மேலும் நாம் கைதுசெய்யப்பட்ட தினம் இக்கிராமத்தில் இருந்து 5 பேர் கைதுசெய்யப்படப் போகின்றனர் என்பது முழுக் கிராமத்திற்கும் தெரிந்திருந்தது. அவர்களில் சிலர் இந்தச் சதி வேலையைச் செய்திருக்காவிட்டால் கிராம மக்களுக்கு எவ்வாறு தெரியும்?" என ஜக்கரிய்யா கேட்டார்.

தம்மை மாட்டிவிட்டவர்களில் ஒருவர் எனக் குழுவினர் நம்பும் பசீர் என்பவரின் மகள் ஜக்கரிய்யாவின் சகோதரரைத் திருமணம் செய்துள்ளார். அவரின் சகோதரர் லொறி ஒன்றினை வாங்குவதற்காக பசீரிடமிருந்து 2000000 ரூபா கடன் வாங்கி அதனைச் செலுத்தத் தவறியிருக்கின்றார். இதனால் ஜக்கரிய்யா அவரின் பசுக்களை விற்று பணத்தினை பசீருக்குக் கொடுத்திருக்கின்றார்.

"மேலும் பசீரின் ஆட்களில் ஒருவரான நவாசின் மனைவி பிரதேசத்தில் ஒரு முன்பள்ளியினை நடத்துகின்றார். நாங்களும் ஒன்றினை நடத்துகின்றோம். அது நன்றாக நடக்கின்றது. நவாசுக்கு இது பொறாமையினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இவர்கள் தாக்குதலைச் சாட்டாகப் பயன்படுத்தி எம்மை அகற்றுவதற்கு எம்மை மாட்டவைத்துள்ளனர்" என ஜக்கரிய்யா குறிப்பிட்டார்.

"நாங்கள் ஜேவிபி ஆதரவாளர்கள். நாங்கள் கல்வியின் முக்கியத்துவத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள். இதற்கான காரணம் நாங்கள் வளர்கையில் எங்களுக்கு அதிக வாய்ப்பு வசதிகள் இருக்கவில்லை. நாங்கள் இறுக்கமற்ற நடைமுறைச் சாத்தியமிக்க இஸ்லாத்தினையே பின்பற்றுகின்றோம். இங்குள்ள சிலர் அதனை எதிர்க்கின்றனர்." என அவர் கூறினார். இப்பிரிவினைச் சேர்ந்த ஹகீமும் ஏனையோரும் 2000 ஆம் ஆண்டில் இருந்து அரபுடன் சேர்த்து தமிழிலும் பிரசங்கம் நடத்தி வருகின்றனர். இதனை இந்தக் குழுவினர் இஸ்லாத்திற்கு எதிரானது எனக் கருதுகின்றனர். மக்கள் புரியும் மொழியில் பேசுவதில் என்ன தவறுள்ளது? நீங்கள் கூறுவது யாருக்கும் புரியாவிட்டால் அரபியில் பிரசங்கம் செய்வதனால் என்ன பயன்," என அவர் கேட்டார்.

"இரண்டு பிரிவுக்கும் இடையிலான சர்ச்சையிலுள்ள சில விடயங்களுள் குர்ஆனின் போதனைகள் பற்றிய வியாக்கியானம், அதாவது உயிரைக் காக்க சமுதாயத்தினைச் சேராத ஒருவருக்கு இரத்தம் வழங்க முஸ்லிம்களுக்கு அனுமதியுண்டா போன்றவை அடங்குகின்றது. நாங்கள் சீதனம் வாங்குவதில்லை. தொப்பி அணிவதும் கணுக்கால் வரை ஆடை அணிவதும் கட்டாயமில்லை என்றும் தொழுவதற்கு வெள்ளை ஆடை தேவையில்லை என்றும் கூறுகின்றோம்.

இறுதியாக நவம்பர் 19 ஆம் திகதி இவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டு ICCPR குற்றச்சாட்டில் இருந்து விடுதலை வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் நிலவுகின்றது. பொலிசார் எங்களின் வீட்டுக்கு அடிக்கடி வருகின்றனர். எங்களின் பள்ளிவாயலுக்குத் தொழுவதற்காக எங்களுக்குப் போக முடியாது எனச் சிஐடியினர் கூறியுள்ளனர். கடந்த வருடத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஒரு வருடமாகப் பள்ளிவாயல் மூடப்பட்டுள்ளது.

"நாங்கள் தொடர்ந்தும் அவப்பெயரிற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஏனெனில் மக்கள் இன்னும் எங்களைப் பார்த்து கோடி ரூபா குழுவினர் வருகின்றனர் எனக் கூறுகின்றனர். உங்களின் தந்தைமார் பயங்கரவாதிகள் எனக் கூறி எங்களின் பிள்ளைகளைத் துன்புறுத்துகின்றனர். இந்த வழக்கு முடியும் வரை எங்களில் எவரும் வெளிநாட்டுக்குப் போக முடியாது அல்லது மீண்டும் வேலைக்குச் செல்ல முடியாது. குற்றச்செயல் பிரிவு ஓஐசி ஜயவர்தன நாங்கள் குற்றமற்றவர்கள் என்பது தனக்குத் தெரியும் எனவும் மேல் மாகாணத்தில் இருந்து கிடைத்த புலனாய்வு அறிக்கையின்படியே நாங்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்" என ஜக்கரிய்யா குறிப்பிட்டார்.

விசாரணைகள் பூர்த்தியாகிவிட்டன என்றும் அவர்களின் கோப்புக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுவிட்டன என்றும் கொழும்பு TID அவர்களுக்குக் கூறியுள்ளது. எமது வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு அங்கிருந்து கட்டளை பிறப்பிக்கப்படவேண்டும். அதுவரை வழக்கு இழுத்தடிக்கப்படும்.

**தடுத்துவைக்கப்பட்டவர் - எல் டி ஜஸ்மின் (33), ஹிஜ்ராபுரம், கெப்பித்திக்கொல்லாவ**
**தற்போது - பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்**
**குற்றச்சாட்டு - சஹ்ரானிடமிருந்து தனது வங்கிக் கணக்கிற்கு நிதியினைப் பெற்றுக்கொண்டார்.**
**தொழில் - இஸ்லாமியக் கல்லூரியில் ஆசிரியர் மற்றும் விவசாயி**
**திருமண அந்தஸ்து - திருமணமானவர்**
**தங்கியிருப்போர் - இரண்டு பிள்ளைகள் )மகன் வயது 5 & மகள் வயது 2)**

"நான் வீட்டில் வைத்து டியூசன் கொடுத்துவந்தேன். ஆனால் எனது விடுதலையின் பின்னர் நான் ஐஎஸ்ஐஎஸ் உடன் தொடர்புடையவன் எனப் பயந்து யாரும் தங்களின் பிள்ளைகளை டியூசனுக்கு அனுப்புவதில்லை. எமது வீட்டிற்கு ஒழுங்கான யன்னல்களோ கதவுகளோ இல்லை. நாங்கள் வீடு கட்டக் கடன் எடுத்துள்ளோம். இப்போது அவற்றினை எல்லாம் எவ்வாறு திருப்பி அடைப்பது என வழி தெரியாமல் இருக்கின்றோம்.," என அவர் கூறினார்.

"எங்கள் முன்வீட்டு அயலவர்கள்தான எங்களைக் காட்டிக்கொடுத்தவர்கள். நான் வந்து இப்போது 2.5 மாதங்களுக்கும் மேலாகிவிட்டது (எழுதுகையில்). நாங்கள் எவ்வாறு இருக்கின்றோம் என அவர்கள் எம்மிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. அவர்களுக்கு உண்மையான மனச்சாட்சி இருக்குமாயின் எங்களுடன் வந்து பேச அவர்களுக்கு ஒரு பிரச்சினையும் இருக்கக்கூடாது" என அவர் கூறினார்.

"நான் சிறையில் இருந்தபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 10 வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஏனைய தமிழ்க் கைதிகளைச் சந்தித்துப் பேசினேன். அவர்களின் கோப்புக்கள் இன்னும் எடுக்கப்படவேயில்லை. இதே கதிதான் எனக்கும் ஏற்படும் என நான் குலைநடுங்கிப் போனேன். நான் சிறையில் கழித்த காலம் முழுவதும் என் நினைவுகள் எல்லாம் என் பிள்ளைகளைப் பற்றியும் அவர்களின் பாதுகாப்புப் பற்றியும் மட்டுமே இருந்தன. நான் இப்போது மீண்டும் வந்துள்ளன். எனது குடும்பத்தினை நான் ஒருபோதும் தனியே விட்டுச் செல்லமாட்டேன். ஏனெனில் எனது அயலவர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது. அதுமட்டுமல்ல என் வீட்டிற்கு ஒழுங்கான கதவுகளோ அல்லது யன்னல்களோ கூட இல்லை". அவரின் மனைவி முரண்நகையுடன் 'இதுதான் நூறு கோடி ரூபா வீடு" எனக் கூறினார்.

"எமது சொந்த மக்களே எம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டனர்" என ஜஸ்மின் கவலையுடன் கூறினார்.

## பரிந்துரைகள்

## அரசாங்கத்திற்கு

### நீதி முறைமை தொடர்பாக

- பின்வருவோரின் வழக்குகளைத் துரிதமாக விசாரித்து அவற்றினை விரைவில் முடிக்கவேண்டும்:

- நன்னடத்தை நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள 18 வயதிற்குக் குறைவானவர்கள்

- ஒரு வருடத்தின் பின்னரும்கூட விசாரணை நடத்தப்படாவிட்டால், மறியலில் அல்லது பிணையில் இருக்கும் தனிநபருக்கு எதிரான வழக்கு பொய்யான குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம் அல்லது அவருக்கு எதிராகச் சாட்சிகளே இல்லாதிருக்கலாம் என்தற்காக வழக்குகளை மீளாய்வு செய்யவேண்டும் என்பதுடன் குற்றமற்றவர்கள் அநாவசியமாகத் தடுத்துவைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த அவரை விடுவிப்பதனைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

a. விசாரணைகள் சான்றுகளை வெளிப்படுத்தினால் சட்ட நடவடிக்கைக்காக இந்த வழக்குகளுக்கு முன்னுரிமையளித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த வழக்குத்தாக்கல் செய்து வழக்கு விசாரணையினை முன்னெடுக்கவேண்டும்.

### தடுத்துவைக்கப்பட்டவர்கள் தொடர்பாக

a. தடுப்பு மையங்கள் மற்றும் நன்னடத்தை நிலையங்கள் உள்ளடங்கலாகச் சிறைச்சாலைகளுக்குக் குடும்ப உறுப்பினர்கள் கிரமமாக விஜயம் செய்வதை அங்கீகரித்தல் / அனுமதித்தல்

b. கைதிகள் இயலுமான அளவு அவர்களின் வீடுகளுக்கு அண்மையிலுள்ள சிறைகளில் வைக்கப்படுகின்றனர் என்பதையும் இதனால் பயணம் செய்வதற்காகக் குடும்பத்தினர் செலவழிக்கும் நேரமும் செலவும் குறைக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்தல்.

c. பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, பல வருடங்கள் சிறைச்சாலையில் அல்லது தடுப்பு மையத்தில் தடுத்துவைக்கப்பட்ட பின்னர் அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டு, சித்திரவதைக்குட்பட்டு அல்லது மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டு, பலவந்தமாக

குற்ற ஒப்புதல் பெறப்பட்ட சகலருக்கும் நட்டஈட்டினை வழங்க சட்ட மற்றும் அல்லது நிர்வாக நிர்வாக வசதிகளை உருவாக்கவேண்டும். (தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களினால் ஏற்கனவே செலவழிக்கப்பட்டவற்றினை மீளச் செலுத்துவதைக் கருத்திற்கொள்ளல் உள்ளடங்குகின்றது).

## கைதுசெய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பதிற்செயற்பாடாற்றுவது தொடர்பானது, தீவிரவாதத்தினை எதிர்த்தல் என்பதனால் ஊக்கப்படுத்தப்பட்டது

a. வழமையான கைதிகளுக்கு வழங்கப்படுவது போன்ற வாழ்வாதார உதவிகள் மற்றும் பிள்ளைகளின் கல்விக்கான உதவிகள் உள்ளிட்ட உதவிகளை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரினதும் குடும்பங்களுக்கும் வழங்கவேண்டும்.

b. குடும்பங்களின் கடன்களை அவற்றின் சார்பில் செலுத்துவதன் மூலம் அவற்றிற்கு உதவுதல் மேலும் அவர்கள் நீண்ட காலத்தில் மீளச் செலுத்தக்கூடியதான அரசாங்கம் வழங்கும் வட்டியற்ற மீள்கொடுப்பனவுத் திட்டத்தினை வழங்கல்.

c. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள சகல பராயமடையாதவர்களும் / மாணவர்களும் பாடப் புத்தகங்கள் மற்றும் மேலதிக டியூசன் வகுப்புக்கள் போன்றவற்றினை அணுகக்கூடியதாக இருப்பதன் மூலம் கல்வியினைத் தொடர்வதற்கும் பரீட்சைக்குமான உரித்தினைக் கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தல்.

d. குடும்ப ஆதரவு இல்லாத நிலையில் அல்லது பாதுகாவலர்கள் இல்லாத நிலையில் அல்லது பாலூட்டும் தாயாக இருக்கும் நிலையில் சிசுக்களுடனும் பிள்ளைகளுடனும் வீட்டுக் காவலில், பாதுகாப்பில் வைக்கப்படும் பெண்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் விசேட ஏற்பாடுகளை வழங்கல். இதனால் பிள்ளை சிறையில் வளரவேண்டி ஏற்படாது.

**சிறைச்சாலை முறைமையின் செயற்திறன் பற்றிய அவசர மறுசீரமைப்பினையும் மீள்மதிப்பீட்டினையும் மேற்கொண்டு விஜயங்களுக்கான கால அளவு, சகல தடுப்புக்களையும்**

**அகற்றல், விஜயத்தின்போது கைதிகளுக்கும் குடும்பத்தினருக்கும் இடையில் உடற்தொடுகையினை அனுமதித்தல் உள்ளிட்ட சிறைச்சாலை பிரயோகிக்கும் ஒழுங்குவிதிகளை மனிதநேயமிக்கதாக ஆக்கி வளங்களைத் தரப்படுத்தல். கைதிகளை அவர்களின் மாவட்டத்திலுள்ள சிறைகளில் அல்லது இயலுமான அளவு அண்மையிலுள்ள இடங்களில் வைத்தல். இதனால் குடும்பங்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை 5 அல்லது 10 நிமிடங்களே பார்ப்பதற்காக நாள் முழுதும் பயணம் செய்து மாவட்டங்களைக் கடந்து பெரும் செலவினைச் செலவழித்து வருவது தவிர்க்கப்படும்**

## நீதிமுறை

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் தமக்கு முன்னர் கொண்டுவரப்படுகையில் அவை உரிய முறையில் கண்காணிக்கப்பட:டு தேவையற்ற தாமதங்கள் அடையாளம் காணப்பட்டு அவை உரிய நிறைவேற்று அதிகாரமுடைய முகவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைக் கையாளும் நீதிபதிகளுக்கு வழிகாட்டல்களை உருவாக்கவும்.

- வழிகாட்டலை உருவாக்கி விரைவாகக் கண்டுபிடிக்கும் முறைமையினை அமுல்படுத்தி பின்வருவோரின் அனைத்து வழக்குகளையும் விரைவாக முடிக்கவேண்டும்:

  - நன்னடத்தை நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள 18 வயதிற்குக் குறைவானவர்கள்,

  - குற்றச்சாட்டின்றி நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள்,

  - தண்டனை வழங்கப்பட முன்னர் சிறையில் 5 - 10 வருடங்களைக் கழித்தவர்கள்.

.

- வழக்கின் நிலையினைப் புரிந்துகொள்வது குடும்பத்தினரின் உரிமை என்பதால் வழக்கு விசாரணையினைப் பார்க்க சகல குடும்பங்களும் செல்வதை இயலுமாக்கல்.

**ஊடகத்திற்கு**

- உணர்வுகளைத் தூண்டி இன வன்முறையினைத் தூண்டுகின்ற பொய்யான செய்திகள் பிரசுரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த அவை பிரசுரிக்கப்படமுன்னர் அவற்றினை உறுதிப்படுத்தவேண்டும் என்பதைப் பத்திரிகையாளர்களுக்கு விளக்குகவதற்காக ஊடக நெறியினைத் தொடர்ந்து வலியுறுத்தவும்
- பொய்ச் செய்திகள் மூலமும் இனவாதப் பிரச்சாரம் மூலமும் செய்திகளை இட்டுக்கட்டுவதன் மூலமும் பிழையான தகவல்களுக்கு ஆதரவு வழங்குவதன் மூலமும் இன வன்முறையினைத் தூண்டுகின்ற ஊடக நிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் அவற்றினை வகைப்பொறுப்புக் கூறவைப்பதற்காகவும் ஊடக ஒழுங்குபடுத்தல் அமைப்புக்களை வலுப்படுத்தல்.

- அவதூறு, பொய்ச் செய்திகளை இட்டுக்கட்டியமை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஊடக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நன்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் அவற்றினை வாபஸ் பெற்று பாதிக்கப்பட்டவர்களிடமும் அவர்களின் குடும்பங்களிடமும் மன்னிப்புக் கேட்கின்றன என்பதை ஊடக ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் கட்டாயம் உறுதிசெய்ய வேண்டும். மேலும் வாழ்வினையும் நற்பெயரினையும் அழித்தமைக்கான தண்டச் சேதங்களை அவை செலுத்துகின்றன என்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். .

## அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு

- தமது குடும்பங்களைப் பராமரிக்கும் பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நடைமுறை வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் உள்ளடங்கலாக வாழ்வாதார உதவியினையும் தொழில்நுட்ப உதவியினையும் வழங்கல். இதனால் வாழ்வாதார முன்னெடுப்புக்கள் நீடுறுதியானவையாகவும் இலாபகரமானவையாகவும் ஆகுகின்றன.

- தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களின் செலவினைக் குறைப்பதற்காக இலவச சட்ட உதவியினையும் சிறைச்சாலை விஜயங்களுக்காகப் போதிய பயணக் கொடுப்பனவினையும் வழங்கல்.

- தாமதமின்றி நீதி வழங்கப்படுகின்றது மேலும் அநீதி தவிர்க்கப்படுகின்றது அல்லது பரிகாரம் காணப்படுகின்றது என்பதை

உறுதிப்படுத்தவும் பயங்கரவாதத்தினை எதிர்ப்பதற்கான கொள்கைகள் சாதகமான மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது என்பதை உறுதிப்படுத்தவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகளின் மறுசீராக்கலுக்காக ஆதரித்து வாதாடல்